பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 16 செவ்வாய்க்கிழமை 01.12.2020 கதிர் 26

**இனி இது ரகசியம் அல்ல!**

சில விடயங்களை வயதில் குறைந்தவர்கள்தான் நமக்கு வழி காட்டித் தருகின்றார்கள்.

தந்தைக்கு உபதேசம் செய்த முருகனைப்போல என்று சொல்லலாம்.

மூத்தவர்களின் ஜனநாயகப் போராட்டங்கள் பக்கம்02 »

# இந்தியாவின் பங்களிப்பில் சம்பந்தன் முழு நம்பிக்கை!

## அஜித் டோவாலுடனான சந்திப்பின் பின்னர் அவரே தெரிவிப்பு



கொழும்பு, டிசெம்பர் 01

தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்திலும், ஐ.நா. தீர்மான விவகாரத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொண்டுள்ள நிலைப்பாட்டை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் நேரில் எடுத்துரைப்பார் என்று என்னுடனான சந்திப்பின் நிறைவில் இந்தியாவின் தேசியப்பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவால் வாக்குறுதியளித்தார். இலங்கைத் தமிழர் விவகாரங்களில் இந்தியா வழங்கும் பங்களிப்பில் எமக்கு முழுமையான நம்பிக்கை இருக்கின்றது.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். 02 »

## காயமடைந்த கைதிகளில் 26 பேருக்குக் கொரோனா!

### 10 பேரின் நிலைமை கவலைக்கிடம்

மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்தில் சிறைச்சாலை அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட கைதிகளில் 26 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

படுகாயங்களுடன்றாகமை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 71 02 »

## மஹர சிறைச்சாலை வன்முறை: விசாரணைக்கு ஐவரடங்கிய குழு

### நீதி அமைச்சரால் நியமனம்

மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதல் குறித்து விசாரணை நடத்துவதற்காக ஐவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

நீதி அமைச்சர் அலி சப்ரியால் இந்தக் குழு நேற்று நியமிக்கப்பட்டது என்று நீதி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

மேற்படி சம்பவம் தொடர்பில் 02 »

### விளையாட்டு வினையானது

## சிறுமியின் உயிரைப் பறித்த அண்ணனின் கழுத்துப் பட்டி!

### பருத்தித்துறையில் துயரம்



பருத்தித்துறை, சாரையடிப் பகுதியில் கழுத்துப்பட்டியில் தொங்கியவாறு 8 வயது சிறுமி சடலமாக மீட்கப்பட்டார். அவரது மரணம் தற்செயலான விபத்து என பிரேத பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டுள்ளது. 02 »

## மட்டு. வாகரை பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் தோல்வி



தமிழ்க் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ளமட்டக்களப்பு, கோறளைப் பற்று வடக்கு வாகரை பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் பெரும்பான்மை வாக்குளால் தோற்கடிக்கப்பட்டது.

மட்டக்களப்பு வாகரை பிரதேச சபையின் பாதீடு தொடர்பான 02 »

## இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக இணைய வழியில் அமைச்சரவைக் கூட்டம்



இலங்கை வரலாற்றில் முதல் முறையாக இணைய தொழில்நுட்பம் ஊடாக நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பங்கேற்றார்.

நிலவும் கொரோனாத் தொற்று நிலைமையில் அமைச்சரவைக் கூட்டத்தின் நடைமுறை குறித்து எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு மத்தியில், ஜனாதிபதி கோட்டாபய 02 »

## 13 வயதுச் சிறுவர்கள் இருவருக்கு மூக்கு முட்ட கசிப்பு பருக்கியோர்!

### முள்ளியவளை முறிப்பில் சம்பவம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முறிப்பு பகுதியில் 13 வயது உடைய இரண்டு சிறுவர்களுக்கு வலுக்கட்டாயமாக,கசிப்பு பருக்கப்பட்ட நிலையில் அவர்கள் இருவரும் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சனியன்று அதிகளவான போதைப்பொருள் ஊட்டப்பட்டமையினால் இரண்டு சிறுவர்களும் சுயநினைவு அற்ற நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் 02 »

## பருத்தித்துறையில் காணாமல்போன இளைஞர் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் நேற்று மீட்பு!

பருத்தித்துறை, வல்லிபுரக்குறிஞ்சி, சிங்கைநகரில் கடந்த சனிக்கிழமை முதல் காணாமல்போயிருந்த இளைஞர் ஒருவர் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் நேற்றிரவு வல்லிபுரக் கோயில் பகுதியில் மீட்கப்பட்டுள்ளார்.

கிருஷ்ணபிள்ளை பிரதீபன் (வயது - 24) என்பவரே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளார்.

வல்லிபுரக் கோயில் வீதிப் பகுதியில் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் அவரை அவதானித்த நபர் ஒருவர் அவசர நோயாளர் காவு வண்டிக்கு அறிவித்து அவரைப் பருத்தித்துறை வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தார்.

மணல் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் 02 »

## 118 ஆக அதிகரித்தது கொரோனா மரணம்!

### மேலும் இருவர் பரிதாபச் சாவு; நேற்றும் 503 பேருக்குத் தொற்று

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் மேலும் 2 பேர் சாவடைந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தாக்கத்தால் பலியானவர்களின் எண்ணிக்கை 118 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் நேற்றும் 503 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் 02 »



# கொரோனாவைக் கட்டுப்படுத்த தனியான இராஜாங்க அமைச்சு

ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொரோனாக் கட்டுப்பாட்டு விவகார இராஜாங்க அமைச்சராக வைத்தியர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே பதவியேற்றுள்ளார்.

இவ்வருடம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலையடுத்து சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு இராஜாங்க அமைச்சராக சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே நியமிக்கப்பட்டார். இந்தநிலையில், அவருக்கு மேலதிக பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.



மஹர சிறையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வன்முறையின் பின்னணியில் சிறை விவகாரங்களுக்கு மேலதிகமாக அவருக்கு இந்தப் புதிய பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னேற முடியாமல் முட்டுச் சந்தில் முடங்கிய போது இளைஞர்களே போராட்டத்தைத் தம் கையிலெடுத்தனர். ஆயுதங்களையும் தூக்கினர்.

*"அது 'சிறுபிள்ளை வேளாண்மை, வீடுவந்து சேராது' என்பது எப்போதோ எமக்குத் தெரியும்"* - என்று சிலர் இப்போது உபதேசம் செய்தாலும், இளைஞர்களின் அந்த வழிமுறைதான் விடுதலைப் போராட்டத்தை உயிர்ப்புடன் முன்கொண்டு சென்றது என்பது கண்கூடு.

இப்போதும் அதுதான் நிலைமை போல தோற்றுகின்றது.

ஆயுதப்போராட்டம் முற்றுப் பெற்று விட்டது. அது முடிந்த கதை. இனிமேல் அஹிம்சை வழியில்தான் - ஜனநாயக மார்க்கத்தில்தான் - போராட்டம் என்று இப்போது போதிக்கப்படுகின்றது.

ஆனால் அந்த அஹிம்சை வழியிலான - காந்தீய மார்க்கத்திலான - அறவழிப் போராட்டத்தை - உயிர்ப்புடன், துடிப்புடன் கொண்டு போகும் தலைமையே தமிழர் மத்தியில் இல்லை என்றே தோன்றுகின்றது.

இருப்பவர்கள் எல்லோருமே கலரிக்கு ஷொட் அடிப்பவர்களாக'(கூட்டத்துக்கு சப்பைக் கட்டுக் கட்டுபவர்களாகவே) தோன்றுகின்றனர். வாக்குகளைச் சுருட்டுவதற்கான வாய்ச்சொல் வீரர்களாகவே அவர்கள் தென்படுகின்றனர்.

சம்பந்தன், மாவையில் தொடங்கி, கடைசி உள்ளூராட்சி உறுப்பினர்கள் வரை எல்லாம் உளுத்துப் போன சக்கைகளாகவே தென்படுகின்றன. இவர்களுக்கு உயிர்ப்போடு - உணர்வோடு - கூடிய போராட்டம் ஒன்றை முன்னெடுக்கக் கூடிய - போராட்டத்தை - கொதி நிலையில் வைத்திருக்கக் கூடிய - தகுதி, வாய்ப்பு, திறமை இருப்ப தாகத் தெரியவில்லை.

தாம் கையில் எடுத்த ஜனநாயகப் போராட்டத்தில் கூட அர்ப்பணிப்புடன் - திடசங்கற்பத்துடன் - பற்றுதியுடன் - விடா முயற்சியுடன் - ஈடுபடும் தெளிவு அவர்கள் எவருக்கும் கிஞ்சித்தேனும் இருப்பதாக நாம் நம்பவில்லை.

ஜனநாயகப் போராட்டத்தைக் கூட கொதி நிலையில் வைத்திருக்கக் கூடிய ஆளுமையுடன் ஓர் இளைஞனை நேற்றுமுன்தினம் கண்டேன். அந்த இளைஞனுக்கு வீரம் செறிந்த சல்யூட்.

யாழ்.பல்கலைக்கழக பண்பாட்டு வாசலில் நேற்றுமுன்தினம் விளக்கேற்றிய அந்தத் தனி இளைஞனை - பல்கலைக் கழக மாணவனைத்தான் - கூறுகின்றேன்.

சுற்றிவரப் படையினர், புலனாய்வாளர்கள், பொலிஸார் - சிங்கள, பௌத்த பேரினவாத மேலாண்மைத் திமிருடன் சூழ நிற்கின்றனர்.

*'இங்கே விளக்குக் கொளுத்தாதே. விலகிப்போ, கொளுத்தினால் கைது செய்வோம்'* - என்று அச்சுறுத்தி அட்டகாசம் புரிகின்றனர் பேரினவாத ஏவல் படையினர்.

ஆனால் அந்த இளைஞன் பயந்தோடவில்லை. அல்லது அச்சுறுத்தலுக்கு அடிபணியவில்லை.

*"அது எனது சமயவுரிமை. அடிப்படை உரிமை. உங்கள் அச்சுறுத்தலுக்கு அஞ்சேன்."* - என்ற பாணியில் பதில் கூறுகின்றான்.

படையினர், பொலிஸார் சூழ்ந்து நின்று அச்சுறுத்த, துணிச்சலாகக் கீழே அமர்ந்து தான் கொண்டு வந்த சரைகளைப் பிரித்து, சிட்டியில் தேங்காய் எண்ணெய் விட்டு, திரி போடுகின்றான்.

படையினர், பொலிஸார், புலனாய்வாளர்கள் சூழ்ந்து அவன் மீது பாயத் தயாராக நெருங்கி நிற்கின்றார்கள்.

அவன் அசரவில்லை. தடுமாறவில்லை. அச்சத்தையும் காட்டவில்லை. சாகவாசமாக, அநாயசமாக, 'நீங்கள் செய்வதைச் செய்யுங்கள். நான் அஞ்சவேயில்லை' என்ற துணிச்சலையும் உரிமைக்கான பேச்சையையும் வெளிப்படுத்தியபடி ஆற, அமர இருந்து தீக்குச்சைத் தட்டி வைத்து விளக்கை ஏற்றுகின்றான்.

அவ்வளவுதான் 'கபக்' என்று பாய்ந்த படைத்தரப்பு, அவனை இழுத்துச் சென்று குண்டுக் கட்டாகத் தூக்கி ஜீப்புக்குள் போட்டு எங்கோ கொண்டு செல்கின்றது.

அப்போதும் அவன் கலங்கவில்லை. உறுதியான அவனின் நடத்தையின் முன்னால் பொலிஸ் - படைத் தரப்பின் அடாவடி அச்சுறுத்தல் புஸ்வாணமாகிப் போனமையைக் கடைசியில் நாம் அவதானித்தோம்.

பொலிஸ் - படைத்தரப்பு மிரட்டலை அடுத்து, பல்கலைக்கழகத்தின் பிற மாணவர்கள் உட்பட குழுமியிருந்தோர் எல்லோரும் நைஸாகக் கழற, தான் தனியே நின்றாயினும் இந்த வழிபாட்டுரிமையை நிலைநாட்டுவேன் என உச்ச உறுதியுடன் நின்ற அந்த இளைஞன் போன்ற தலைவர்கள்தாம் நமக்கு இப்போது அவசியமானவர்கள்.

எனக்கு அந்த மாணவன் யார் என்று தெரியாது. ஆனால் அப்படியான கொள்கைப் பற்றும், தான் வகுத்த நிலைப்பாட்டில் தளராத பிடிவாதமும், துணிச்சலும், தற்றுணிவும், அகிம்சைப் போராட்டத்திலும் தன்னையும், தன்னுயிரையும் அர்ப்பணிக்கும் கைமாறு எதிர்பாராத வேட்கையும் கொண்ட தலைவர்களினால்தான் தமிழரின் போராட்டத்தை கொஞ்சமேனும் அசைத்து முன்நகர்த்த முடியும் என நான் நினைக்கிறேன்.

எமது தற்போதைய அரசியல் தலைவர்கள் யாரிடமும் நான் இத்தகைய தற்றுணிவையும் அர்ப்பணிப்பையும் காணவேயில்லை.

பல்கலைக்கழக மாணவன் என்ற வகையில் அந்த இளைஞனின் பண்பியல்புகள், பெறுபேறுகள், ஒழுங்குகள் குறித்து ஏதேனும் குறைபாடு பல்கலைக் கழக நிர்வாகத்தால் கூறப்படக் கூடும்.

ஆனால், தனது உறுதியான - துணிச்சலான - திடமான - நடவடிக்கை மூலம் ஜனநாயகப் போராட்டங்களைக் கூட எத்துணை கொதிநிலையில் கொண்டு நடத்தலாம் என்பதை இந்தச் சம்பவம் மூலம் நமது தலைவர்களுக்கு அவன் உணர்த்தியிருக்கின்றான் என்றே எனக்குத் தோன்றுகின்றது. - தந்தைக்கு உபதேசித்த நம் முருகன் போல.

நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே...!

– மின்னல் –

## இலங்கை வரலாற்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ராஜபக்ஷவின் யோசனைக்கேற்ப இந்த அமைச்சரவைக் கூட்டம் இணைய தொழில்நுட்பத்தின் ஊடாக நடத்தப்பட்டது.

கொரோனாத் தொற்று நிலைமைக்கு மத்தியிலும் நாட்டின் அபிவிருத்தி மற்றும் மக்களின் வாழ்க்கை நிலை தொடர்பில் முன்னெடுக்க வேண்டிய தீர்மானங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி, அபிவிருத்தி நடவடிக்கைகளை முறையாகச் செயற்பாட்டு ரீதியில் முன்னோக்கிக் கொண்டு செல்லும் நோக்கில் அமைச்சரவைக் கூட்டம் இணைய தொழில்நுட்பத்தின் ஊடாக இடம்பெற்றது.

கொழும்பு 07. விஜேராமவிலுள்ள பிரதமரின் உத்தியோகப்பூர்வ இல்லத்திலிருந்து இணைய தொழில்நுட்பம் ஊடாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் குறித்த அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

அமைச்சரவை அமைச்சர்கள் தங்களது வீடுகள் மற்றும் அலுவலகங்களிலிருந்து மேற்படி அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

## மஹர சிறைச்சாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விசாரணைகளை நடத்தி, பரிந்துரைகளுடனான அறிக்கையொன்றை ஒரு மாதத்துக்குள் இந்தக் குழு முன்வைக்க வேண்டும்.

மேல் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி குசலா சரோஜனி வீரவர்தன தலைமையிலான மேற்படி குழுவில் நீதி அமைச்சின் பிரதம சட்ட ஆலோசகர் ஜனாதிபதி சட்டத்தரணி யூ.ஆர்.டி.சில்வா, நீதி அமைச்சின் மேலதிக செயலாளர் ரோஹண ஹபுகஸ்வத்த, பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, முன்னாள் சிறைச்சாலைகள் ஆணையாளர் காமினி ஜயசிங்க ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

## மட்டு. வாகரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சபை அமர்வு நேற்று தவிசாளர் சீ.கோணலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

வரவு செலவுத் திட்டத்துக்கு 12 பேர் எதிராகவும் 6 பேர் ஆதரித்தும் வாக்களித்தனர்.

## காயமடைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கைதிகளுள் 48 கைதிகளுக்கு நேற்று பி.சி.ஆர். பரிசோதனை நடத்தப்பட்டது.

இதில் 26 கைதிகளுக்குக் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என ராகமை வைத்தியசாலையின் உயர்மட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதேவேளை, படுகாயமடைந்த கைதிகளில் 10 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கின்றது என வைத்தியசாலை வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

## சிறுமியின் உயிரைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறித்த சிறுமி நேற்று நண்பகல் வீட்டில் தனித்திருந்த நிலையிலேயே கழுத்துப்பட்டியில் தொங்கியவாறு சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

வெளியே சென்றிருந்த சிறுமியின் தாயும், தமையனும் வீடு திரும்பியபோது சிறுமி வீட்டு யன்னலில் கழுத்துப்பட்டியில் தொங்கிக்கொண்டிருப்பதைக் கண்டுள்ளனர். உடனே அவர்கள் கழுத்தில் சுற்றியிருந்த கழுத்துப்பட்டியை அவிழ்த்த போதிலும் சிறுமியின் உயிர் பிரிந்து விட்டது.

அதையடுத்து சிறுமியின் சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

சம்பவம் தொடர்பில் திடீர் மரண விசாரணை அதிகாரி சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டார். பிரேத பரிசோதனையை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை சட்ட மருத்துவ அதிகாரி கனகசபாபதி சுவேதா மேற்கொண்டார்.

பாடசாலை கழுத்துப்பட்டி கழுத்தை இறுக்கியதாலேயே மரணம் நிகழ்ந்துள்ளது என உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சி இந்து ஆரம்பப் பாடசாலையில் தரம் 4இல் கல்வி கற்கும் பருத்தித்துறை, சாரையடிப் பகுதியைச் சேர்ந்த சிறீதரன் ஹம்சி (வயது 8) என்ற மாணவியை இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

வீட்டில் தனித்திருந்த சிறுமி தமையனின் கழுத்துப் பட்டியை தனது கழுத்தில் மாட்டி ஜன்னலில் கட்டி விளையாடியிருக்கலாம் எனவும், அதன்போது எதிர்பாராத விதமாக கழுத்துப்பட்டி கழுத்தை இறுக்கியதால் சிறுமி பரிதாபமாக உயிரிழந்திருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## 118 ஆக அதிகரித்தது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதையடுத்து மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 23 ஆயிரத்து 987 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 17 ஆயிரத்து 560 பேர் குணமடைந்துள்ளனர். 6 ஆயிரத்து 309 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## பருத்தித்துறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கும்பல் ஒன்றே குறித்த இளைஞரைக் கடத்தியது எனக் குடும்பத்தாரால் சந்தேகம் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 13 வயதுச் சிறுவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்

வலுக்கட்டாயமாக சிறுவர்களுக்கு கசிப்பு பருக்கியமை தொடர்பாக முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில்இரண்டு சிறுவர்களுடைய பெற்றோரும் முறைப்பாடு செய்துள்ளனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் சுமார் 8 பேர் உள்ளனர் எனப் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பொலிஸாரின் விசாரணையில் சனியன்றுஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் நேற்று முன்தினம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில், அவரை டிசம்பர் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். ஏனைய நபர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை.

## இந்தியாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைக்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு வந்திருந்த இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவால் நேற்று முன்தினம் மாலை நாட்டை விட்டுப் புறப்படுவதற்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனைக் கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரின் இல்லத்துக்கு அழைத்து மூடிய அறைக்குள் சுமார் 30 நிமிடங்கள் பேச்சு நடத்தினார். சத்தம் சந்தடியின்றி நடைபெற்ற இந்தப் பேச்சு தொடர்பில் சம்பந்தன் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முக்கியத்துவம் வாய்ந்த இந்த சந்திப்பின்போது இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, புதிய அரசமைப்பு உருவாக்கம், வடக்கு, கிழக்கு அபிவிருத்தி, ஆட்சி மாற்றத்தின் பின்னர் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் இலங்கை மீதான ஐ.நா. தீர்மானம் உட்படப் பல விடயங்கள் குறித்து சுருக்கமாகப் பேசினோம்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் எதிர்நோக் கிய - எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வுகள் கிடைக்க வேண்டும் என்பதில் இந்தியா உறுதியான நிலைப்பாட்டில் இருக்கின்றது எனவும், இந்த விடயத்தை இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் தான் நேரில் நடத்திய பேச்சுகளின்போதும் தெரிவித்திருந்தார் எனவும் அஜித் டோவால் என்னிடம் கூறினார் - என்றார்.

அண்மையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இணைய வழி ஊடாகப் பேச்சு நடத்திய வேளையில், தமிழ் மக்களின் உரிமைகள் குறித்த இந்தியாவின் கவலைகளை எடுத்துரைத்த இரண்டு மாதங்களுக்குப் பின்னர், மோடியின் முக்கிய பிரதிநிதியான அஜித் டோவால், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை எவரும் எதிர்பாராத வகையில் நேரில் சந்தித்திருப்பது இலங்கை அரசை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

# விளக்கீடு சமயம் பொலிஸும் இராணுவமும் காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகள்

## கண்டிக்கிறது யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவை

யாழ்ப்பாணம்,டிசெ.01

கார்த்திகை தீபத்தன்று பொலிஸாரும் இராணுவத்தினரும் மேற்கொண்ட காட்டுமிராண்டித்தனமான செயல்கள் கண்டனத்திற்குரியவை என்று தெரிவித்திருக்கின்றார் யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவைத் தலைவர் ஈசான ஸ்ரீ.சி.சக்திகிரீவன்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

இலங்கைத் திருநாட்டில் இந்துக்கள் தமது மத அனுஷ்டானங்களைக் கூடச் சுதந்திரமாகக் கடைப்பிடிக்க முடியாது என்பதை கார்த்திகை தீபத்திரு நாளன்று இடம் பெற்ற பொலிஸ்,இராணுவ அடாவடித்தனங்கள் நன்கு கோடிட்டு காட்டுகின்றன. இச்செயல் உலகில் உள்ள இந்துக்களின் இதயங்களை நெருடிவிட்டது. இது நல்ல சகுனமாகத் தெரியவில்லை.

அரசமைப்புச் சட்டம் அனைத்து மதங்களையும் சமமாகப் பாதுகாக்கின்றது என்றால் இந்துக்கள் விடயங்களில் மாறுபாடுகளும் இடர்பாடுகளும் ஏன் தொடர வேண்டும்? ஆண்டாண்டு காலமாக எமது முன்னோர் பேணி வந்த கார்த்திகைத் தீபத்திருநாளை மாவீரர் தினத்தோடு இணைப்பது மொட்டம் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் செயலாகும். இது இந்துக்களை துன்புறுத்தும் கபடத்தனமான யுக்தியாகக் கையாளப்படுகிறது.

கார்த்திகைத் தீபத்தை உலகில் வாழும் இந்துக்கள் ஆலயங்களிலும் வீடுகளிலும் தீபங்களை ஏற்றி அதில் இறைவனை தியானிக்கிறார்கள். இந்தியாவில் திருவண்ணாமலையில் பெரும் தீபம் ஏற்றப்படுகிறது இவற்றை எல்லாம் மாவீரர் நினைவேந்தல் என்று கூற முடியுமா?

கார்த்திகை தீபத் திருநாள் அன்று பரவலாக அடாவடித்தனங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டமையை அறிய முடிகிறது, ஆலயங்களில் தீபம் ஏற்ற வைத்திருந்த வாழைக் குற்றிகள் சப்பாத்து கால்களால் உதைத்து வீழ்த்தப்பட்டிருக்கின்றன. தீபச் சுட்டிகள் சப்பாத்துக் கால்களால் மிதிக்கப்பட்டுள்ளன. தீபம் ஏற்றிய பல்கலைக் கழக மாணவன் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார். இவர்கள் என்னதான் குற்றத்தை செய்துள்ளார்கள்? இவை, இந்துக்களின் நெஞ்சங்களைப் புண்படுத்தி விட்டன. இத்தகைய செயல்களை பௌத்த விகாரைகளிலோ ஏனைய மத வழிபாட்டிடங்களிலோ செய்ய முடியுமா?

வடக்குக் கிழக்கில் பொது இடங்களில் நினைவேந்தல் நிகழ்வை செயற்படுத்தக் கூடாதென்று நீதிமன்றம் கூறியதற்கமைவாகவே செயற்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார் என ஊடகங்கள் வாயிலாக அறியவருகிறது. நீதிமன்றம் மாவீரர் நினைவேந்தலை தடை செய்ததேயொழிய கார்த்திகை தீபத் திருநாளைத் தடை செய்யவில்லை. அப்படியொரு செய்தி வெளிவந்ததாகவும் இல்லை. இது இவ்வாறிருக்க தவறாக செயற்பட்டுவிட்டு நீதிமன்றத்தைத் துணைக்கு இழுப்பது பொருத்தமற்றதாகும்.

ஆத்மீகச் செயற்பாடுகளில் ஈடுபடும் மக்களை - குறிப்பாக இளைஞர்களை - துன்புறுத்துவது, குழப்புவது போன்றவை, அவர்களின் எதிர்கால வாழ்விற்குக் குந்தகம் ஏற்படுத்துவதாக அமைகிறன.

காலம்காலமாக நாம் பேணி வந்த பண்பாட்டு விழுமியங்களை நாம் தொடர்வதற்கு பரிபூரண சுதந்திரம் படைத்தவர்கள் என்பதை ஞாபகப் படுத்துகின்றோம்.

இது போன்ற அராஜகக் காட்டுமிராண்டிச் செயல்களை சம்பந்தப்பட்டவர்கள் இனி ஒரு போதும் தொடரக் கூடாது என்பதை வலியுறுத்துகின்றோம். - என்றுள்ளது.

## கொழும்பின் நிலை ஆபத்தில் எச்சரிக்கின்றார் மேயர் ரோஸி!



கொரோனா தொற்றால் ஏற்படும் இறப்பு எண்ணிக்கை அதிகரித்து வருவதாலும் அதிகமான மக்கள் தொற்றுநோயால் பாதிக்கப்படுகின்றமையால் கொழும்பில் நிலைமை ஆபத்தாக உள்ளது என கொழும்பு மாநகர மேயர் ரோஸி சேனாநாயக்க எச்சரித்துள்ளார்.

அண்மையில் பதிவான கொரோனா வைரஸ் தொடர்பான இறப்புகள் மற்றும் தொற்று உறுதியான நோயாளிகள் பெரும்பாலும் கொழும்பு மாவட்டத்திலேயே அடையாளம் காணப்பட்டனர்.

இந்நிலையில் ஓய்வுபெற்ற பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பயிற்சியாளர்களின் சேவைகளைப் பெற மருத்துவ பீடத்தின் உதவியையும் ரோஸி சேனாநாயக்க நாடியுள்ளார்.

தற்போது கொழும்பில் ஒரு நாளைக்கு மேற்கொள்ளப்படும் 991 பி.சி.ஆர் சோதனைகளில் 249 பேருக்கு கொரோனாத் தொற்று இருக்கின்றமை கண்டறியும்போது, அது ஒரு தீவிரமான பிரச்சினை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு கொழும்பின் நிலைமையைக் கட்டுப்படுத்த கொழும்பு மாநகர சபையுடன் இணைந்து அரசாங்கம் அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருவதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த கொழும்பு மாநகர சபைக்கு தனியார் மற்றும் வெளிநாட்டு தரப்பினர்களிடம் இருந்து நன்கொடை கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## இராணுவம் தீபத்தை கடாசியமையை கண்டிக்கின்றார் சத்தியலிங்கம்!

தீபங்களை இராணுவத்தினர் வீசி எறிந்தமையை கண்டிக்கின்றேன் என தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச் செயலாளரும் வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சருமான ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

உலகத்திலுள்ள அனைத்துத் தமிழ் மக்களும் கடந்த ஞாயிற்றுக்கிழமை கார்த்திகை தீப திருநாளை மிகவும் சிறப்பாக அனுஷ்டித்தனர்.

இந்நிலையில், வடக்கிலுள்ள தமிழர்கள் கார்த்திகை தீப திருநாளை அனுஷ்டித்தபோது, இராணுவத்தினர் பல இடங்களிலும் சமய அனுஸ்டானங்களை செய்யவிடாது தடுத்துள்ளனர். இந்நிலையிலேயே குறித்த செயற்பாட்டுக்கு கண்டனம் தெரிவித்து ப.சத்தியலிங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட் டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு-

கார்த்திகைத் தீபம் ஏற்றிய இந்துக்களை அச்சுறுத்தி தீபங்களை வீசியெறிந்த இராணுவத்தினரின் செயல் உச்சபட்ச அடக்குமுறையாகும்.

இந்தச் செயலை வன்மையாகக் கண்டிப்பதோடு, இலங்கையில் சமய, கலாசார நிகழ்வுகளை சிறுபான்மையினர் அச்சமின்றி கடைப்பிடிக்கும் சூழல் ஏற்படவேண்டும். - எனக் குறிப்பிட்டுள்ளார்.

## சகோதரர்களுக்கிடையே மோதல் முல்லேரியாவில் ஒருவர் சாவு!

முல்லேரியா பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவருக்கு இடையில் ஏற்பட்ட மோதலின் போது ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முல்லேரியா பொலிஸ்பிரிவுக்குட்பட்ட வெலிவிட்ட பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 10.35 மணியளவில் சகோதரர்கள் இருவருக்கு இடையில் மோதல்கள் இடம்பெற்றுள்ளன எனப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சம்பவத்தின் போது சகோதரர்கள் இருவருக்கும் இடையில் குடும்பப் பிரச்சினை காரணமாக வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளதுடன், பின்னர் அது மோதலாக மாறியுள்ளது.

இதன்போது ஒருவர் பொல்லால் அவரது சகோதரரைத் தாக்கியுள்ளார் என பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

கடுவல பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சம்பவத்தின் பின்னர் சந்தேக நபர் தப்பிச் சென்றுள்ளமையுடன், அவரை கைது செய்வதற்காக பொலிஸார் தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## ஷானி அபேசேகரவின் பாதுகாப்பை உறுதி செய்வது அதிகாரிகளின் கடமை

### கரு ஜயசூரிய சுட்டிக்காட்டு

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியிருக்கும் ஷானி அபேசேகரவிற்கு அவசியமான சிகிச்சை வசதிகள் அனைத்தையும் பெற்றுக்கொடுப்பதுடன் அவரது பாதுகாப்பை உறுதிசெய்வது அதிகாரிகளின் கடமையாகும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அவருடைய அடிப்படை உரிமைகள் ஒருபோதும் மீறப்படக்கூடாது என்றும் முன்னாள் சபாநாயகர் வலியுறுத்தியிருக்கிறார்.

கரு ஜயசூரிய தனது டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவில் இவ்வாறு கூறியுள்ளார்.

மிகச்சிறந்த புலனாய்வு அதிகாரியாக பிரபல்யம் பெற்ற ஷானி அபேசேகர, சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருக்கிறார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

அவருக்கு அவசியமான சிகிச்சை வசதிகள் அனைத்தையும் பெற்றுக்கொடுப்பதுடன் அவரது பாதுகாப்பை உறுதிசெய்வது அதிகாரிகளின் கடமையாகும். அவருடைய அடிப்படை உரிமைகள் ஒரு போதும் மீறப்படக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

## குருகுலம் தமிழ் மொழி ஒளிபரப்பு அட்டவணை

| 01.12.2020 | செவ்வாய்க்கிழமை |
|---|---|
| 04.00 - 04.55 | தரம் - 12 உயிர்முறைமைகள் தொழிநுட்பம் (த) |
| 05.00 - 05.55 | தரம் - 13 உயிர்முறைமைகள் தொழிநுட்பம் (த) |
| 06.00 - 06.55 | தரம் - 12 தொழிநுட்பத்திற்கான விஞ்ஞானம் (த) |
| 08.00 - 08.55 | தரம் - 08 கணிதம் (த)(1ஆம், 2ஆம்)<br>தரம் - 08 விஞ்ஞானம் (த)(2ஆம், 4ஆம்) |
| 09.00 - 09.55 | தரம் - 09 கணிதம் (த)(1ஆம், 2ஆம்)<br>தரம் - 09 விஞ்ஞானம் (த)(1ஆம், 2ஆம்) |
| 10.00 - 10.55 | தரம் - 10 கணிதம் (த) |
| 11.00 - 11.55 | தரம் - 11 புவியியல் (த) |
| 12.00 - 12.55 | தரம் - 12 புவியியல் (த) |
| 13.00 - 13.55 | தரம் - 13 புவியியல் (த) |
| 14.00 - 14.55 | தரம் - 07 கணிதம் (த) (1ஆம், 2ஆம்)<br>தரம் - 07 விஞ்ஞானம் (த) (2ஆம், 4ஆம்) |
| 15.00 - 15.55 | தரம் - 12 பௌதிகவியல் (த) |
| 16.00 - 16.55 | தரம் - 13 பௌதிகவியல் (த) |
| 17.00 - 17.55 | தரம் - 13 தொழிநுட்பத்திற்கான விஞ்ஞானம் (த) |
| 18.00 - 18.55 | தரம் - 06 கணிதம் (த) (1ஆம், 2ஆம்)<br>தரம் - 06 விஞ்ஞானம் (த) (2ஆம், 4ஆம்) |
| 22.30 - 23.25 | தரம் - 12 அரசியல் விஞ்ஞானம் (த) |
| 23.30 - 24.30 | தரம் - 13 அரசியல் விஞ்ஞானம் (த) |

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## டோவல் வருகையின் விளைவு

இந்தியப் பிரதமரின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகரான அஜித் டோவலின் இரண்டு நாள் இலங்கை விஜயம் பெரிய சத்தம் சந்தடியின்றி நடந்து முடிந்துள்ளது.

ஏதோ மாலைதீவு – இலங்கை – இந்தியா முத்தரப்பு பாதுகாப்பு மாநாட்டுக்காக அவர் வந்து போனார் என்ற மாதிரி விவகாரம் முடிக்கப்பட்டிருக்கின்றது.

ஆறு வருடங்களாக நடத்தப்படாத இந்த மாநாட்டை, இப்போது, இந்தக் கொவிட் தொற்றுப் பிரச்சினைக்குள் நடத்த வேண்டிய அவசியமும் கட்டாயமும் ஏதும் இருக்கவில்லை.

இந்தியாவின் உயர்மட்டப் பிரதிநிதி ஒருவர் கொழும்பு வந்து செல்வதற்கும், அது தென்னிலங்கையில் தவறான புரிதல்களை ஏற்படுத்தி விடாமல் தவிர்ப்பதற்குமான 'பாசாங்கு' நிகழ்வே இந்த முத்தரப்புப் பாதுகாப்பு மாநாடு என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

முதலில் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரே கொழும்பு வருவதாக இருந்தது. எனினும் இராணுவத் தரப்புப் பின்னணியுடன் அதிகாரத்துக்கு வந்திருக்கும் இலங்கை ஜனாதிபதிக்கு, சில விடயங்களை இராணுவத் தரப்புப் பின்னணியுடன் உணர்த்துவதற்காக தேசிய பாதுகாப்பு ஆலோசகர் டோவலை இலங்கைக்கு அனுப்ப புதுடில்லித் தலைமை தீர்மானித்ததாகக் கூறப்படுகின்றது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் விசேட செய்தி ஒன்றை எழுத்தில் எடுத்து வந்து இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்தார் அஜித் டோவல்.

பின்னர் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் – வேறு யாருமின்றி – தனியாக, விரிவாகப் பேசினார் அவர்.

அச்சமயம் இந்தியாவின் சில இறுக்கமான நிலைப்பாடுகளை இலங்கை ஜனாதிபதியிடம் இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் பட்டவர்த்தனமாக எடுத்துரைத்தார் என்றும் –

அவற்றுக்கு, இந்தியத் தரப்புக்கு இணக்கமான – சாதகமான – பதில்களை இலங்கை ஜனாதிபதி இசைவோடு தெரிவித்தார் என்றும் –

அப்பதில்கள் இன்றைய நிலையில் புதுடில்லியை முழு அளவில் திருப்திப்படுத்துவனவாக இருந்தன என்றும் – மிக நம்பகரமாகத் தெரியவந்தது.

இலங்கை – இந்திய ஒப்பந்த இணக்கப்பாடுகளை, புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளில் முழு அளவில் உள்வாங்குதல், காலம் தாழ்த்தாமல் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துதல், இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு உரித்துள்ள தரப்புகளுடன் பேசித் தீர்வு காணுதல் போன்றவற்றை மேலும் காலம் தாழ்த்தாமல் முன்னெடுக்க இந்தியத் தரப்பு வலியுறுத்தியதாம்.

அவற்றுக்கு சாதகமாகப் பதிலளித்த இலங்கை ஜனாதிபதி, மாகாண சபைத் தேர்தல்களை விரைந்து நடத்தவும், தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பு முயற்சிகளை அடுத்த ஓராண்டுக்குள் இணக்கமாக முடிவுக்குக் கொண்டு வருவதற்குத் தாம் திட்டமிட்டுள்ளார் எனவும் இந்தியத் தரப்புக்குக் கோடி காட்டினார் என்று தெரிகின்றது.

இந்தச் சந்திப்புகள் தொடர்பில் தமக்குள்ள திருப்தியை தமிழர் பிரதிநிதியான இரா.சம்பந்தனிடம் தெரியப்படுத்துவதோடு, தீர்வுக்கான முன்நகர்வுகளை தீர்க்கத்துடன் முன்னெடுப்பதற்கு அவரை வழிப்படுத்தவும் விரும்பிய இந்தியப் பிரதிநிதி அஜித் டோவல், அதற்காகவே கொழும்பை விட்டுப் புறப்பட முன்னர், ஏற்கனவே திட்டமிடப்படாத சந்திப்பு ஒன்றை சம்பந்தருடன் சடுதியாக மேற்கொண்டார்.

இந்தச் சந்திப்பை இரகசியமாக வைத்திருக்கவும், சந்திப்பில் பேசப்பட்ட விடயங்களை வெளியிடாதிருக்கவும் இரு தரப்புகளும் – இந்தியப் பக்கமும் சம்பந்தனும் – முடிவு செய்திருந்தனர் என்றும் தெரிகின்றது.

ஆனால், ஊடகங்கள் ஏதோ ஒரு வழியில் இந்தச் சந்திப்பை மணந்து பிடித்து அம்பலப்படுத்தி விட்டன.

ஊடகங்கள் நேரடியாகக் கேட்டு விட்டமையால் வேறு வழியின்றி முதலில் *"இலங்கை மற்றும் வடக்கு, கிழக்கு அபிவிருத்தி குறித்துப் பேசினோம்"* – என்று சமாளித்தார் சம்பந்தன். பின்னர் *"நாம் சொல்ல வேண்டியவற்றைச் சொன்னோம். அவர்கள் கேட்க வேண்டியவற்றைக் கேட்டார்கள்"* – என்ற தமது வழமையான பாணியில் பதிலை அவிழ்த்து விட்டார்.

இறுதியாக சில ஊடகவியலாளர்களுக்கு *"பேசிய விடயங்களைப் பகிரங்கப்படுத்துவதில்லை என்று நாம் தீர்மானித்திருக்கின்றோம். அதனால் எதுவும் கூறவே முடியாது"* – என்று வெளிப்படையாக உண்மையாகக் கூறி சமாளித்திருக்கின்றார் அவர்.

சரியோ, பிழையோ கோட்டாபய ராஜபக்ஷ நாட்டின் தலைமைப் பதவியை ஏற்ற பின்னர், இலங்கை விவகாரத்தில் தனது ஈடுபாட்டை – பங்களிப்பை – ஓர் எல்லைவரைத் தலையீட்டை – இறுக்கி முன்னெடுக்கும் புதுடில்லியின் புதிய எத்தனத்தின் ஆரம்ப நகர்வாகவே டோவலின் இந்த விஜயத்தை நோக்க முடியும்.

இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் பதவி என்பது முக்கிய நிலை. இந்தியாவில் ஓர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவிக்கு நிகரானது, இந்தியாவில் பிரதமர் சார்பில் யுத்தத்தையும், சமாதானத்தையும் பிரகடனப்படுத்தக் கூடிய உயர் பதவி இது. அப்பதவியில் இருப்பவரின் வருகையையும் அவரின் கருத்துக்கள், செய்திகள் போன்றவற்றையும் இலங்கை வெறுமனே உதாசீனம் செய்ய முடியாது என்பது கவனிக்கப்பட வேண்டியது.

# புலி ஆதரவாளர் மத்தியில் தன்னை வீரனாகக் காட்ட முயலும் சுமந்திரன்!

## அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குற்றச்சாட்டு



தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் புலம்பெயர் ஆதரவாளர்களின் முன்னிலையில் தன்னை வீரராக காண்பிப்பதற்கான தேவை சுமந்திரனுக்கு தற்போது ஏற்பட்டுள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கண்டி – குண்டசாலை பகுதியின் கல்மடுவத்த வீதியின் புனரமைப்பு பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

வடக்கிலுள்ள தமிழர்களின் ஒரே தலைவர் தான் என்பதை சர்வதேசத்துக்கு காண்பிக்கும் நோக்குடன் எம்.ஏ.சுமந்திரன் செயற்பட்டு வருகிறார். இதனால், சுமந்திரன் தற்போது பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்.

வடக்கு தமிழர்களின் ஒரே பிரதிநிதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிடையாது என்பதை, கடந்த தேர்தல்களில் வடக்கு மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

நாட்டில் சமாதானம், நல்லிணக்கம் ஆகியவற்றை எதிர்பார்க்கும், சிங்களம், தமிழ், முஸ்லிம் உள்ளிட்ட அனைத்து இனத்தவர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியலை நிராகரிக்கின்றனர்.

தனி நாடொன்றைப் பெற்றுக்கொள்ளும் விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் முறியடிக்கப்பட்டாலும், அவர்களின் எண்ணம் தொடர்ந்தும் அவ்வாறே காணப்படுகிறது.உலகிலுள்ள பலம் வாய்ந்த நாடுகளிலுள்ள சிலரின் ஒத்துழைப்புக்கள் இதற்கு உள்ளன எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# குறுகிய கால ஒப்பந்தத்தின் அடிப்படையில் கிழக்கு முனையம் இந்தியாவுக்கு வழங்கல்!

## அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவிப்பு



கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் குறுகிய கால ஒப்பந்த அடிப்படையில் இந்தியாவுக்கு வழங்கவே எதிர்பார்க்கப்பட்டுள்ளது என கப்பற்துறை மற்றும் துறைமுக அபிவிருத்தி அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கிழக்கு முனையத்தின் 49 வீத உரிமம் இந்தியாவுக்கும்,51 வீத உரிமம் இலங்கை துறைமுக அதிகார சபை வசமும் இருக்கும் வகையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்.

கிழக்கு முனையம் அபிவிருத்தி தொடர்பில் ஆராய அமைச்சின் செயலாளர்கள் மற்றும் துறைமுக அபிவிருத்தி துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது. குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அடுத்தக்கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

# பி.சி.ஆர். புறக்கணிப்போர் அவர்களுக்கு உதவுவோர் மூன்று வருடங்கள் சிறை!



பி.சி.ஆர். பரிசோதனைகளை புறக்கணிப்பவர்களையும் அவர்களுக்கு உதவுபவர்களுக்கும் 3 வருட சிறைத் தண்டனை வழங்க முடியும் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அத்தோடு தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறுபவர்களின் சொத்துக்களை அரசுடைமையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

கொவிட் தொற்றைக் கண்டறிவதற்காக பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுக்குமாறு அறிவித்துள்ள சிலர் அதனைப் புறக்கணித்து வருகின்றனர் எனவும், அவ்வாறானவர்களுக்கு சிலர் உதவுகின்றனர் எனவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

இத்தகைய நபர்கள் தொடர்பில் தகவல்களை திரட்டி பீ அறிக்கை தயாரித்து அதனை நீதிமன்றத்தில் சமர்பிக்கவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதன்போது அவர்களின் சொத்துக்களை அரசுடைமையாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதேவேளை இந்த நபர்களுக்கு இணையத்தின் ஊடாக உதவி ஒத்துழைப்புகளை வழங்கி வரும் நான்கு நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் எதிராக தனிமைப்படுத்தல் மற்றும் நோய்தடுப்பு சட்டவிதிகளுக்கமைய சட்ட நடவடிக்கை எடுப்பதுடன், இதன் போது குற்றம் நிரூபிக்கப்படும் இரு தரப்பினரையும் மூன்று வருடங்கள் வரை சிறை வைக்கவும் முடியும். – என்றார்.

# கிழக்கு மாகாணத்தை கடந்து நாளை சூறாவளி செல்லும்!

நாட்டின் கிழக்கு பகுதியை ஊடறுத்து சூறாவளியொன்று கடந்து செல்லவுள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 2ஆம் திகதி நாளை (புதன் கிழமை) இந்த சூறாவளி கடந்து செல்லவுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

இதன் காரணமாக மீனவர்களை இன்று முதல் கடலுக்குச் செல்ல வேண்டாமென வானிலை மையம் எச்சரித்துள்ளது.

16
2020
பால்நிலை வன்முறைக்கு எதிரான
16 நாள் செயற்பாடு - 2020
16 Days of Activism Against Gender Based Violence
JSAC
துயருறும் பெண்ணுக்காய்
துயர் தீர்க்கும் கரங்களாய் இணைவோம்
யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center

# கண்டலடி மாவீரர் துயிலுமில்லம் விசமிகளால் சேதமாக்கப்பட்டது!

## கண்டிக்கிறார் சாணக்கியன் எம்.பி.



கண்டலடி மாவீரர் துயிலும் இல்லம் சேதமாக்கப்பட்டுள்ளமைக்கு,தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

கார்த்திகைத் தீபத்திருநாளான கடந்த (ஞாயிற்றுக்கிழமை), இனம் தெரியாத விசமிகளினால் வாகரை - கண்டலடி மாவீரர் துயிலும் இல்லம் சேதமாக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அந்த இடத்துக்கு நேற்று சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், விசமிகளால் சேதமாக்கப்பட்டிருந்த கண்டலடி மாவீரர் துயிலும் இல்லத்தைப் பார்வையிட்டிருந்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர் - இவ்வாறான செயற்பாடுகள் எம் உரிமை மற்றும் உணர்வுகளை ஒடுக்குவதாக அமையாது. மேன் மேலும் தூண்டுவதாக அமைகின்றது எனக் குறிப்பிட்டிருந்தார்.



## திவிநெகும மோசடி மீதான வழக்கு பஸில் உட்பட நால்வர் விடுதலை!

திவிநெகும மோசடி வழக்கில் இருந்து முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உள்ளிட்ட 4 பேரும் நிரபராதிகள் எனத் தெரிவித்து கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது, திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்துக்குச் சொந்தமான நிதியை முறைக்கேடாகப் பயன்படுத்திய சம்பவம் தொடர்பாக இவர்களுக்கு எதிராக சட்டமா அதிபரால் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.



இந்நிலையில் நல்லாட்சி அரசாங்கத்தால் தொடுக்கப்பட்ட இந்த வழக்கில் அனைத்து குற்றச்சாட்டுகளும் இதுவரை நிரூபிக்கப்படவில்லை என கொழும்பு மேல் நீதிமன்றத்தில் பஸில் ராஜபக்ஷ தரப்பு சமர்ப்பிப்புகளை முன்வைத்தது.

இந்த சாட்சியங்களை ஆராய்ந்த பின்னர் அரசு தரப்பும் சமர்ப்பிப்புகளை தாக்கல் செய்தது, அதாவது குற்றச்சாட்டுகளை நிரூபிக்க அரசு தரப்பில் போதுமான ஆதாரங்கள் இல்லை என்றும் அவர்களை விடுவிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதனை அடுத்து இந்த மோசடி வழக்கில் இருந்து முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் 3 பேரை விடுவித்து கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதேவேளை இந்த வழக்கில் 3 மாதங்களுக்கு ஒருதடவை குற்றப்புலனாய்வில் ஆஜராக வேண்டும் என விதிக்கப்பட்ட பிணை நிபந்தனையையும் அவருக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத் தடையும் கடந்த 23 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றதால் நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு பொதுச்சந்தையில் 47 பேருக்கு பி.சி.ஆர். சோதனை!



தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்து வரும் கொரோனாத் தொற்று காரணமாக கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு பொது சந்தையில் 47 பேருக்கு எழுமாற்றாக பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இந்தப் பரிசோதனை சுகாதார வைத்திய அதிகாரிகளின் பணிப்புரைக்கமைய இடம்பெற்றது.

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று பொதுசந்தை பகுதியில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் இனங்காணப்பட்டமையைத் தொடர்ந்து மட்டக்களப்பு பொதுச் சந்தையில் வெளிமாவட்ட வியாபாரிகளுடன் நேரடி தொடர்புடைய வியாபாரிகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை மட்டக்களப்பு அரசடி, தாமரைக்கேணி, கோட்டமுனை, உப்போடை ஆகிய பொதுச் சுகாதார பிரிவுகளில் வெளிமாவட்டங்களில் இருந்து வருகை தந்தவர்களில் தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது.

மட்டக்களப்பு பொதுச்சுகாதார வைத்திய அதிகாரி கே.கிரிசுதனின் வழிகாட்டலின் கீழ் மட்டக்களப்பு பொதுச்சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பொதுச்சுகாதாரப் பரிசோதகர் குழுவால் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இந்தப் பரிசோதனை முடிவுகளின் படி பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட 47 பேருக்கும் கொரோனா தொற்று இல்லை என பொது சுகாதார வைத்திய அதிகாரி கே.கிரிசுதன் தெரிவித்தார்.

## கிழக்கு முனையம் தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன?

### உலப்பனே சுமங்கல தேரர் கோரிக்கை

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்குவது தொடர்பில் அரசாங்கம் உறுதியான நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும்.

நல்லாட்சி அரசாங்கம் செய்த தவறையே தற்போதைய அரசாங்கமும் தொடர்கிறது என வன்முறைகளைத் தோற்கடிக்கும் மக்கள் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் உலப்பனே சுமங்கல தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## ஹெரோயினுடன் ஒருவர் கைது!

அத்துருகிரிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹபரகட பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது ஹெரோயினுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

ஹோமாகம பகுதியைச் சேர்ந்த 53 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இவரிடமிருந்து 2 கிராம் 505 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை அத்துருகிரிய பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## கொரோனாவைக் கட்டுப்படுத்தாவிட்டால் பாரிய அலையாக மாறலாம் - திஸ்ஸ



நாட்டின் தற்போதைய நிலைமையில் சமூகத்தில் இருந்து கொரோனா உப கொத்தணிகள் ஏற்பட்டு வருகின்றன. அது மிகவும் பாரிய அலையாக உருவாகலாம் என வைரஸ் நோய் தொடர்பான நிபுணரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

கொரோனா தொற்று காரணமாக இதுவரை இலங்கையில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் மரணித்துள்ளனர். அதனால் சுகாதார ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை முறையாக எடுத்துச் செயற்படாவிட்டால் இந்த இரண்டாவது அலையிலேயே இடம்பெறும் மரண எண்ணிக்கை 2, 3 மடங்காகலாம்.

மேலும் மனிதர்கள் மூச்சை சுவாசித்து வெளியேற்று வதன் மூலம் இந்த வைரஸ் தொடர்ந்து உயிர் பெறுகின்றது. அதனால் இலங்கை போன்ற தீவு நாடு உள்நாட்டுக்குள்ளே முகக்கவசம் அணிந்து, சமூக இடைவெளியைப் பேணிக் கொண்டு, சவர்க்காரமிட்டு கைகளைக் கழுவி, முறையான சுகாதார வழிகாட்டலுடன் எமது நடவடிக்கைகளை மேற்கொண்டால் எமது பூமியில் இருந்து இந்த வைரஸை இல்லாமலாக்கலாம்.- என்றார்.

அத்துடன் ஒருசிலருக்கு இந்த கொரோனா வைரஸ் உடலுக்குள் தொற்றிக்கொண்டாலும் அவர்களுக்கு நோய் அறிகுறிகள் காட்டுவதில்லை என்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. என்றாலும் அவர்கள் அறியாமலே, இந்த வைரஸ் பரவும் நிலை இருக்கின்றது. அதனால் மூன்றாவது கொரோனா அலை வருவதற்கு முன்னர் இந்த அலையைக் கட்டுப்படுத்த முடியாவிட்டால் இந்த அலையே பாரிய அலையாக மாறலாம்.- என்றார்.

## மோட்டார் வாகன திணைக்கள சேவை பெற தொலைபேசி இலக்கம் அறிமுகம்!

கொழும்பு, டிச.01

மோட்டார் வாகன திணைக்களத்தால் அலுவலகங்களின் சேவைகளை பெற்றுக்கொள்ள தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நாரஹேன்பிட்டி மற்றும் வெஹரஹெர அலுவலகங்களின் சேவைகளை பெற்றுக் கொள்பவர்கள், முன்பதிவு செய்து கொள்வதற்காகவே இந்தப் புதிய தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அலுவலகங்களில் சேவைகளை பெற்றுக்கொள்பவர்கள் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, 0112 677877 என்ற தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்பு கொண்டு முன்பதிவை செய்துகொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மொத்த விற்பனை நடவடிக்கைகளுக்கு புறக்கோட்டையில் முற்றாக முடக்கம்!

கொழும்பு,டிச.01

கொழும்பு - புறக்கோட்டை வழமைக்கு திரும்பினாலும் மொத்த விற்பனை நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கடந்த (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் அஜித் ரோஹண மேலும் கூறியுள்ளவை வருமாறு -

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளான கொழும்பு மாவட்டத்தில் மட்டக்குளி, வெரலபட மற்றும் புறக்கோட்டை பொலிஸ் பிரிவுகளும், கம்பஹா மாவட்டத்தில் ராகம மற்றும் நீர்கொழும்பு பொலிஸ் பிரிவும் நேற்று காலை 5 மணியுடன் வழமைக்குத் திரும்பியுள்ளன.

ஆனாலும் மட்டக்குளி மற்றும் வெரலபட பொலிஸ் பிரிவுகளில் சில பிரதேசங்களும், தொடர்மாடி குடியிருப்புக்களும் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அந்தவகையில் புறக்கோட்டை பொலிஸ் பிரிவு வழமைக்கு கொண்டுவரப்பட்டாலும், 4 மற்றும் 5 ஆம் சந்தி பகுதிகள் திறக்கப்படமாட்டா. இதேவேளை மெனிங் சந்தையும் திறக்கப்படமாட்டாது.

இந்த பகுதியில் மொத்த விற்பனை நடவடிக்கைகள் எதுவும் நடைபெறா. - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# கண்டி நகரின் பாதுகாப்பு ஆபத்தில்!

## என்கிறார் லக்ஷ்மன் கிரியெல்ல



பல்வேறு பகுதிகளிலிருந்து கைதிகளை பழைய போகம்பரை சிறைக்கு மாற்ற அரசாங்கம் எடுத்த முடிவால் முழு கண்டி நகரத்தின் பாதுகாப்பும் ஆபத்தில் உள்ளது என எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் பேசிய அவர், இந்த நடவடிக்கை எடுப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு கண்டியில் எந்த நோயாளிகளும் அடையாளம் காணப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

போகம்பரை சிறைச்சாலைக்கு அருகிலுள்ள கண்டி தேசிய வைத்தியசாலையில் கடந்த சில நாள்களில் பல நோயாளிகள் அடையாளம் காணப்பட்டமையை அடுத்து கண்டி சந்தை மூடப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக போகம்பரை சிறைச்சாலையில் இதுவரை 150 இற்கும் மேற்பட்ட கைதிகளுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தற்போதும் பல தொழிலாளர்கள் தினமும் போகம்பரை சிறைச்சாலை வளாகத்துக்கு வருகை தருகிறார்கள் என்றும் இதனால் வைரஸ் மேலும் பரவுகிறது என்றும் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

ஆகவே தகுந்த நடவடிக்கை எடுத்து கண்டியில் வசிப்பவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு லக்ஷ்மன் கிரியெல்ல அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டார்.

## மோட்டார் சைக்கிள் விபத்து வவுனியாவில் ஒருவர் காயம்!





வவுனியா ரயில் நிலைய வீதியில் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பாக மேலும் தெரியவருகையில் –

ரயில் நிலைய வீதியில் இருந்து குருமன்காடு நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளுடன், எதிர்த்திசையில் பயணித்த மற்றுமொரு மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியதில் விபத்து இடம்பெற்றது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவ இடத்துக்கு சென்ற வவுனியா போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வழமைக்குத் திரும்பின அரச பஸ் சேவைகள்!

அரச பஸ் சேவைகள் நேற்று (திங்கட்கிழமை) முதல் வழமை போல இடம்பெறும் என இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் கிங்ஸிலி ரணவக்க தெரிவித்துள்ளார்.

தூரப் பிரதேசங்களுக்கான பஸ் சேவை கடந்த காலங்களில் பாரிய அளவில் குறைக்கப்பட்டிருந்த நிலையில், இந்த சேவைகள் நேற்று முதல் வழமைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பஸ் பயணம் செய்ய மக்கள் அச்சம் கொண்டிருந்த நிலையில், அந்த அச்சத்தை போக்கும் வகையில் பஸ் சேவைகளை உரிய வகையில் நடத்தவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், கடமைகளுக்குச் செல்கின்றவர்களுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில், போதிய அளவான பஸ் சேவைகளை நடத்துமாறு, விடயத்துக்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இதேவேளை, தற்போது மேல் மாகாணத்தைத் தவிர, ஏனைய பகுதிகளில் தனியார் பஸ் சேவைகளை உரிய வகையில் நடத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்திருப்பதாகத் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

## 24 மணி நேரத்தில் 558 பேர் குணமடைவு!

இலங்கையில் கொரோனா தொற்றில் இருந்து 24 மணிநேரத்தில் மேலும் 558 பேர் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் இதுவரை குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 17 ஆயிரத்து 560 ஆக அதிகரித்துள்ளது. இதுவரை கொரோனா தொற்று உறுதியாகியோரின் மொத்த எண்ணிக்கை 23 ஆயிரத்து 484 ஆகக் காணப்படுகின்றது.

இதில் 5 ஆயிரத்து 808 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 498 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவ கண்காணிப்பில் உள்ளனர்.

மேலும் இலங்கையில் கொரோனா தொற்றால் இதுவரை 116 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.
## சந்தைகள், இறைச்சிக்கடைகள்
## குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் – 2021

கீழ்க்குறிப்பிடப்படும் சந்தைகள், இறைச்சிக்கடைகளினை – 2021 ஆம் ஆண்டிற்கு (01.01.2021 – 31.12.2021) குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் சபையினால் கோரப்படுகின்றன.

மீள் கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 03.12.2020 – 15.12.2020 நண்பகல் 12.00 மணி வரை
மீள் கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 15.12.2020 பி.ப 02.00 மணி வரை
மீள் கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 15.12.2020 செவ்வாய்கிழமை பி.ப 02.00 மணி

மீள் கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் 'சந்தைகள், இறைச்சிக்கடைகள் மீள்கேள்விக்குத்தகை – 2021' என எழுதி மூலப்பிரதியை '**செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்**' என்னும் முகவரிக்கும், இணைப்பிரதியை '**பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்**' என்னும் முகவரிக்கும் எதிர்வரும் 15.12.2020 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் மீள் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

மீள் கேள்விப்பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| தொ. இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவ கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை (VAT,NBT நீங்கலாக) முழுவருடத்திற்கானது | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| | அச்சுவேலி உப அலுவலகம் | | | | |
| 01 | அச்சுவேலி பொதுச்சந்தையும் *(அச்சுவேலி வல்லை வீதி தற்காலிக சந்தை) துவிச்சக்கரவண்டி தரிப்பிடமும் அச்சுவேலி பஸ் நிலைய வாகன தரிப்பிடமும் * காலம் (01.01.2021 - 30.04.2021) | 500.00 | 25,000.00 | 3,335,000.00 (நான்கு மாதங்களிற்கானது) | |
| 02 | வளலாய் தம்பாலை பொதுச்சந்தை | 500.00 | 2000.00 | 282,150.00 | |
| | புத்தூர் உப அலுவலகம் | | | | |
| 01 | புத்தூர் பொதுச்சந்தை | 500.00 | 2000.00 | 346,500.00 | |
| 02 | புத்தூர் கோழியிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 308,880.00 | 500.00 |
| | கோப்பாய் உப அலுவலகம் | | | | |
| 01 | கோப்பாய் மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 10,000.00 | 2,331,450.00 | 2250.00 |
| 02 | கோப்பாய் ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | 623,700.00 | 2250.00 |
| | உரும்பிராய் உப அலுவலகம் | | | | |
| 01 | உரும்பிராய் ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | 561,330.00 | 2250.00 |
| 02 | உரும்பிராய் கோழியிறைச்சிகடை | 500.00 | 3000.00 | 437,580.00 | 2250.00 |

01. சந்தையிலிருந்து 1/2 கி.மீற்றர் சுற்றாடலில் மீன், மரக்கறி விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.
02. கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையுடன் சமுகமளிக்கும் போது அதன் நிழற்படப்பிரதியையும் பிரதேச கிராம சேவையாளரினால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் அல்லது வதிவிடத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஏதாவதொரு பிரதி (மின்சார கட்டணப் பட்டியல்/வங்கிக்கணக்கு புத்தகப்பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
03. கேள்விப்படிவக்கட்டணம், கேள்வித்தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு காலத்துக்குக்காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரி செலுத்தப்படவேண்டும்.
04. உள்ளூராட்சி மன்றங்களினால் 'தவறுனராக' கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் பழவம் வழங்கப்பட்டபின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
05. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
06. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அவரது ஒரு பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
07. விலை மதிப்பீட்டுத்திணைக்களத்தினால் மாதாந்த வாடகை மீள்மதிப்பீடு செய்யப்படும் போது மதிப்பீடு செய்யப்படும் தொகை செலுத்தப்படல் வேண்டும்
08. சந்தையை குத்தகைக்கு எடுப்பவர்களால் உற்பத்தியாளர்களினால் கொண்டு வரப்படும் உற்பத்தி பொருட்களுக்கு 4% வரி அறவிடப்படல் வேண்டும். பொதுச்சந்தையில் கழிவு நடைமுறை, தரகுக்கட்டண அறவீடு என்பன முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.
09. உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை இல 03/2015 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளை பின்பற்றி ஒப்பந்தம் செய்யப்படல் வேண்டும். இது தொடர்பான விபரங்களை கேள்விப்பத்திரங்களை பெறும் போது தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
10. சபையின் அச்சுவேலி கொல்களத்தினை ஆடு, மாடு இறைச்சிக்கடைகளின் குத்தகைதாரர்கள் பாவனைக்குட்படுத்த அனுமதி வழங்கப்படும். மேலும் கொல்களப்பாவனை தொடர்பில் சபையினது அறிவுறுத்தல்களிற்கு குத்தகைதாரர்கள் கட்டுப்படுதல் வேண்டும். கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**குறிப்பு:-** அச்சுவேலி பொதுச்சந்தை திருத்தவேலைகள் பூரணமாக முடிவடைந்தபின் தற்காலிகமான கேள்வி ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டு கேள்வி கோரப்படும்.

**தியாகராஜா நிரோஷ்**
**தவிசாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை**
**புத்தூர்.**
**2020.12.01**



# பிரதமரைச் சந்தித்தார் பொலிஸ் மா அதிபர்!

கொழும்பு, டிசெ. 01

நாட்டின் 35 ஆவது பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டமையைத் தொடர்ந்து சி.டீ.விக்ரமரத்ன, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து, தனது சேவை தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

நேற்று (திங்கட்கிழமை) முற்பகல், விஜேராமவிலுள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது, புதிய பொலிஸ்மா அதிபருக்கு வாழ்த்து தெரிவித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நாட்டின் பாதுகாப்பு நிலைமை மற்றும் பொலிஸ் துறையின் தற்போதைய பணிகள் என்பன தொடர்பாகவும் கேட்டறிந்தார்.

இலங்கை பொலிஸ் துறையை முன்னோக்கிக் கொண்டு செல்லல், தேசிய ரீதியிலான பொறுப்புகளைத் தவறாது செயற்படுத்துதல் என்பன தொடர்பில் புதிய பொலிஸ்மா அதிபர் நம்பிக்கை வெளியிட்டார்.

நாட்டுக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கும் கொவிட் - 19 தொற்று நிலைமையிலிருந்து இலங்கை மக்களைப் பாதுகாப்பதற்கு இலங்கை பொலிஸ் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் தொடர்பில் பிரதமர் பாராட்டு தெரிவித்தார்.

1986 ஆம் ஆண்டு உதவி பொலிஸ் அதிகாரியாக சேவையில் இணைந்த சி.டீ.விக்ரமரத்ன, கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் கொத்தலாவெல பாதுகாப்பு பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பட்டம் பெற்றவராவார்.

பிரேட்ஃபோர்ட் பல்கலைக்கழகம் மற்றும் ஹாவர்ட் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் முதுகலை டிப்ளோமா பெற்றுள்ள சி.டீ.விக்ரமரத்ன, இதற்கு முன்னர் 13 தடவைகள் பதில் பொலிஸ்மா அதிபராகப் பணியாற்றியுள்ளார்.

சி.டீ.விக்ரமரத்ன, 13 வெளிநாட்டு கற்கைநெறிகளை நிறைவுசெய்துள்ளார். இந்தியா, பிரித்தானியா, ஜப்பான், சிங்கப்பூர், பிரேஸில், மியன்மார் ஆகிய நாடுகளில் மனித வள முகாமைத்துவம், உளவுத்துறை, பொது பொலிஸ்துறை, பயங்கரவாதத்தை தடுத்தல், போதைப்பொருள் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தல் ஆகிய துறைகளில் கற்கைநெறிகளை மேற்கொண்டுள்ளார்.

இலங்கை பொலிஸ் வரலாற்றில் அதிக காலம் பதில் பொலிஸ்மா அதிபராக சேவையாற்றிய சி.டீ.விக்ரமரத்ன, பொலிஸ் வரலாற்றில் இடம்பிடித்துள்ள அதிகாரியாவார். அத்துடன், இலங்கை பொலிஸ் வரலாற்றில் புலனாய்வு அதிகாரியொருவர் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

சி.டீ.விக்ரமரத்ன, முப்பது ஆண்டுகால யுத்தத்தை நடவடிக்கையில் மிகுந்த பங்களிப்பு செலுத்தியவராவார். அவர் நுகேகொட புனித ஜோன் கல்லூரி, மஹனாம கல்லூரி மற்றும் கொழும்பு ஆனந்தா கல்லூரி என்பவற்றின் பழைய மாணவர் ஆவார்.

இதன்போது புதிய பொலிஸ்மா அதிபரால் பிரதமருக்கு நினைவு பரிசொன்றும் வழங்கி வைக்கப்பட்டது.

# அடையாளம் காணப்படாமலே நூற்றுக்கணக்கான தொற்றாளர்!

## அது நல்லதல்ல என்கிறது அரச மருத்துவர் சங்கம்

இலங்கையில் நூற்றுக்கணக்கான தொற்றாளர்கள் அடையாளங்காணப்படாதவர்களாக இருக்கின்றமை சிறந்த நிலைவரம் அல்ல என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

கொழும்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹரித அழுத்கே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் தினமும் இனங்காணப்படும் தொற்றார்களை மாவட்ட ரீதியில் வகைப்படுத்திய பின்னர் சுமார் 100 அல்லது 200 பேர் வேறு தொற்றாளர்கள் என்று அடையாளப்படுத்தப்படுகிறார்கள். இது சிறந்த ஒரு நிலைவரம் அல்ல என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

அந்த 100 அல்லது 200 தொற்றாளர்கள் எந்த மாவட்டத்திலும் சேர்க்கப்படாவிட்டாலும் அவர்களும் நாட்டின் பிரஜைகளே. இவர்கள் நாட்டின் ஏதேனுமொரு பகுதியில் உள்ள தொற்றாளர்களாவர். அவர்கள் எந்த பிரதேசங்களில் என்பதைக் குறிப்பிட முடியாவிட்டால் அது மிகவும் அபாயமான நிலைமையாகும்.

எவ்வாறு இதுபோன்ற தொற்றாளர்கள் அடையாளப்படுத்தப்படுகிறார்கள் என்பதை தொற்று நோயியல் பிரிவு நாட்டுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

முகவரிகளைச் சரியாகக் கண்டுபிடிக்க முடியாமையின் காரணமாகவா இவ்வாறு இடம்பெறுகிறது? அல்லது தொழில்நுட்ப ரீதியான காரணிகளால் இவர்களை ஏனைய தொற்றாளர்களின் எண்ணிக்கைக்குள் உள்ளடக்க முடியாமலுள்ளதா? அல்லது சிறைச்சாலையில் தொற்றாளர்கள் இனங்காணப்படுவதால் அவர்கள் வேறு என்ற பிரிவிற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளார்களா?

கண்டி தேசிய வைத்தியசாலையில் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அதேபோன்று நாரஹேன்பிட்டியவிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றிலும் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளார்கள். இவ்வாறு வைத்தியசாலைகளுக்குள் தற்போது தொற்றாளர்கள் இனங்காணப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான கிளை கொத்தணிகளைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதாரத்துறையினர் உயர்ந்தபட்ச சேவையை ஆற்ற வேண்டும். அத்தோடு இவை தொடர்பில் தமது பரிந்துரை என்ன என்பதையும் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். – எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கொழும்பில் கொரோனா குறைவடைய வாய்ப்பு!

## வைத்தியர் சுதத் சமரவீர தெரிவிப்பு

கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் கொரோனா பரவல் எதிர்வரும் காலங்களில் குறைவடையலாம் என தொற்று நோயியல் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைத்த அந்தப் பிரிவின் பிரதான வைத்தியர் சுதத் சமரவீர, தற்போது மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகளின் அடிப்படையில், கொரோனா வைரஸை பரப்புகின்ற நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்திருக்கின்றமையை அவதானிக்க முடிகிறது எனக் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் நோயாளர்களுக்கு மேற்கொள்ளப்படுகின்ற பி.சி.ஆர். பரிசோதனைகளில், அவர்களது மாதிரிகளில் கொரோனா வைரஸின் செறிமானம் குறைவாக உள்ளமையும் தெரியவந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்மூலம் எதிர்காலத்தில் கொழும்பு மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார்.

# திருநெல்வேலியில் 8 வியாபார நிலையங்களை திறக்க அனுமதி!

யாழ்ப்பாணம், டிசெ. 01

யாழ்ப்பாணம் – திருநெல்வேலியில் அமைந்துள்ள நொதேர்ண் வைத்தியசாலை, யாழ்.வைத்தியசாலை மற்றும் 8 வியாபார நிறுவனங்களையும் கட்டுப்பாட்டுடன் நேற்று (திங்கட்கிழமை) தொடக்கம் மீளத் திறக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி மற்றும் மருத்துவர் பாலமுரளி இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும்கூறியுள்ளவை வருமாறு –

இந்த நிறுவனங்களில் பணியாற்றும் 105 பேர் குடும்பத்துடன் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவர்கள் தவிர்ந்த வேறு பணியாளர்களைக் கடமைக்கு அமர்த்தி, மீளத்திறப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து காரைநகருக்குத்திரும்பிய ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கடந்த வெள்ளிக்கிழமை உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், அவர் சென்று வந்த இடங்களில் தொடர்புடையவர்கள் கடந்த சனிக்கிழமை தனிமைப்படுத்தப்பட்டனர்.

கடந்த 21ஆம் திகதி கொழும்பு வெள்ளவத்தையிலிருந்து காரைநகருக்கு வருகை தந்த அவர், 3 நாள்களுக்கு மேல் பல இடங்களுக்கு நடமாடிய நிலையில், தனிமைப்படுத்தப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை அவரது மாதிரிகள் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் கொரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அதனையடுத்து, யாழ்ப்பாணம் மாநகரில் திருநெல்வேலியில் அமைந்துள்ள இரண்டு தனியார் வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவுகள் மூடப்பட்டன.

அந்த நபர் வருகை தந்தபோது கடமையிலிருந்த அனைவரும் குடும்பத்துடன் சுயதனிமைப்படுத்தப்பட்டனர். அத்துடன் யாழ்ப்பாணம் நகரில் போக்குவரத்துச் சேவை வழங்கும் நிறுவனம், இரண்டு புடைவையகங்கள், புத்தகக் கடை, கராஜ், வெதுப்பகம் உள்ளிட்டவைகளும் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலில் மூடப்பட்டன.

இவ்வாறு மூடப்பட்ட நிறுவனங்களுக்கு, காரைநகர் வாசி சென்றபோது கடமையிலிருந்த 105 பேர் குடும்பத்துடன் சுயதனிமைப்படுத்தப்பட்டனர். அவர்களுக்கான பி.சி.ஆர்.பரிசோதனை எதிர்வரும் வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்படவுள்ளது. இந்த நிலையில் சுய தனிமைப்படுத்தப்பட்டவர்களைத் தவிர்த்து, ஏனையவர்களை கடமைக்கு அமர்த்தி மூடப்பட்ட நிறுவனங்களை நேற்றுத் தொடக்கம் திறக்க அனுமதிக்கப்படுவதாக யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார். இதேவேளை, யாழ்ப்பாணம் மாநகரத்தில் நேற்று 33 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.**

**வணிகத்தில் மூன்றாம் தேர்வு (வெளிவாரி) - 2017 முதலாம் அரையாண்டுப் பரீட்சை**

கடந்த மாதம் நடாத்த திட்டமிடப்பட்டு தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டிருந்த மேற்படி பரீட்சையானது டிசெம்பர் மாதம் 5ம் திகதி தொடக்கம் 19ம் திகதி வரை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன. மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் தங்களது பரீட்சை அனுமதி அட்டையினை 03.12.2020ம் திகதியிலிருந்து 04.12.2020ம் திகதி வரை அலுவலக நேரத்தில் (காலை 8.30 மணி - 4.15 மணி) திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிக விவரங்களுக்கு 021- 222 3612 என்ற தொலைபேசி எண்ணினூடாக தொடர்புகொள்ள முடியும்.

குறிப்பு - பரீட்சைகள் யாவும் சுகாதார அமைச்சின் நடைமுறைகளுக்கு அமைய நடைபெறும்.

**பதிவாளர்**
**30.11.2020**

காலைக்கதிர்
Kalaikkathir









மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட அமைதியின்மையைத் தொடர்ந்து நேற்றிரவு சிறைச்சாலை தீப்பற்றி எரிவதையும், அதை அணைக்கும் நடவடிக்கையில் தீயணைப்புப் படையினர் ஈடுபடுவதையும், சிறைச்சாலைக்கு முன்னால் கைதிகளின் உறவினர்கள் ஒன்றுகூடி நின்று கதறி அழுவதையும் படங்களில் காணலாம்.

# மஹர சிறைக் கலவரம் கட்டுப்பாட்டுக்குள்: 8 பேர் உயிரிழப்பு: 70 பேர் வரை படுகாயம்

## கொரோனா வைரஸ் தொற்றைக் காரணம் காட்டி கைதிகள் தப்பிச் செல்ல முயற்சித்தமையின் விளைவு என்கிறது அரசு

கொழும்பு,நவம்பர் 30

கம்பஹாமாவட்டத்திலுள்ளமஹரசிறைச்சாலையில் நேற்று மாலை முதல் ஏற்பட்ட வன்முறை இன்று நண்பகல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது எனச் சிறைச்சாலைகள் இரா ஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தின் போது 8 கைதிகள் உயிரிழந்துள்ளனர் எனவும், 70 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

சிறைச்சாலையில் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பாக நாடாளுமன்றத்தில் இன்று எதிர்க்கட்சியினர் எழுப்பிய கேள் விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனாத் தொற்றைக் காரணம் காட்டி கைதிகள் சிலர் நேற்று மாலை சிறைச்சாலையில் இருந்து தப்பிச் செல்ல முயற்சித்தபோது, சிறைச்சாலை அதிகாரிகள் அவர்களைத் தடுத்து நிறுத்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண் டனர். இதன்போது கைதி ஒருவர் உயி ரிழந்ததைத் தொடர்ந்து அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

அதன்பின்னர் கைதிகள் அங்கிருந்த கட்டடங்களுக்குத் தீ வைத்தும், பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்தியும் நடந்துகொண்ட நிலையில் விசேட அதிரடிப்படை மற்றும் கலகம் அடக்கும் பொலிஸாரைப் பயன்படுத்தி நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நிலைமையைக் கட்டுப்படுத்தும் நட வடிக்கையின் போது துரதிஷ்டவசமாக 8 கைதிகள் உயிரிழந்துள்ளனர். மேலும் 70 பேர் சம்பவத்தில் காயமடைந்துள்ளனர். அவர்களில் 226 பேருக்கு தொற்றுள்ளதாக கூறப்படுகின்றது. எவ்வாறாயினும் இந்தச் சம்பவத்தின் பின்னால் கைதிகளைத் தூண்டும் வகையில், வெளியில் இருந்து யாரேனும் செயற்பட்டுள்ளனரா என்று புலனாய்வு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. - என்றார்.

# சிறை வன்முறைக்கு அரசே பொறுப்புக்கூற வேண்டும்!

## நாடாளுமன்றில் ஜே.வி.பி. வலியுறுத்து



கொழும்பு, நவ. 30

மஹர சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறைக்கு அரசே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்று ஜே.வி.பியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இன்று உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மஹர சிறைச்சாலையில், நேற்றிரவு மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இதுவரை 8 பேர் உயிரிழந்துள்ளனர். 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இந்த எண்ணிக்கைகள் அதிகரிக்கும்என்றுவைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தண்டனை பெறுபவர்கள் சிறைச்சாலைகளில் இருந்தாலும், அவர்கள் அரசின் பொறுப்பில் இருப்பதாகவே கருதப்படும். எனவே, இந்தச் சம்பவத்துக்கான முழுப் பொறுப்பையும் அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இது உடனடியாக எழுந்த சர்ச்சை அல்ல. ஏற்கனவே மஹர உள்ளிட்ட சிறைச்சாலையில் உள்ளவர்களைக் கொரோனா அச்சுறுத்தலை அடுத்து பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வந்தார்கள்.

மஹர சிறைச்சாலையில் கொரோனா வால் மட்டும் 183 பேர் பாதிக்கப்பட்டுள்ளார் கள். குறிப்பாக சிறைச்சாலைகளில் இருவர் இருக்க வேண்டிய இடத்தில் 8 பேரளவில் இருக்கின்றார்கள்.

இதனால்தான் கொரோனா வைரஸ் அங்கு வேகமாகப் பரவி வருகின்றது. இந்தநிலையில், தங்களைபி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தி உரிய நடவ டிக்கைகளை மேற்கொள்ளுமாறுதான் கைதிகள் கோரியிருந்தார்கள். இது நியா யமானதொரு கோரிக்கையாகும். இதனை நிராகரித்தமையால்தான் இன்று இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

இது ஜனநாயகத்துக்குக் கொஞ்சம் கூட ஏற்புடையதல்ல. இது தொடர்பாக சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் உரிய பதிலை வழங்க வேண்டும் -என்றார்.

# கோட்டாவுக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் சதித்திட்டமே மஹர சிறைச்சாலை மோதல்

## இப்படிக் கூறுகின்றார் அமைச்சர் விமல்



கொழும்பு, நவ. 30

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு சர்வதேச ரீதியில் அவமதிப்பை ஏற்படுத்த ஒழுங்கமைக்கப்பட்ட சதி நடவடிக்கையே மஹர சிறைச்சாலை கலவரம் என்று அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியதாவது:-

கொரோனா நோயாளிகளின் நெரிசலின் விளைவாக இந்தச் சம்பவம் நடக்கவில்லை. சதுரங்க உள்ளிட்ட குழுவினர் அங்குள்ள கைதிகளுக்குப் போதை மாத்திரைகளை விநியோகித்துள்ளனர். இந்த மாத்திரைகளைப் பயன்படுத்தும் போது ஒருவரின் இரத்தத்தைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றும். இந்தப் பரிசோதனையை இருவருக்குச் செய்த பின்னர், வெலிக்கடை சிறைச்சா லையில் முடிந்த வரை மாத்திரையை விநியோகிக்கவும், ஒரு கொலைகார சூழ் நிலையை உருவாக்கவும் அவர்கள் தயாராக இருந்தனர்.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட் டிருந்த கைதிகளால் சதுரங்க வழிநடத்தப் பட்டுள்ளார். புலனாய்வுப் பிரிவினர் இதைப் பற்றி அறிந்து கொண்டு சதுரங்க என்ற இந்தக் கைதியை வேறு சிறைக்கு மாற்றினர். இதில் சம்பந்தப்பட்ட ஒரு சில கைதிகளையும் மாற்றினர். இதனால் வெலிக்கடை சிறைச்சாலையில் இந்தச் சூழ் நிலையை உருவாக்க முடியவில்லை.

ஆனால், துரதிஷ்டவசமாக, மஹர சிறைச்சாலையில் இந்தத் திட்டம் அரங் கேற்றப்பட்டுள்ளது. இது நெரிசலால் ஏற் படும் மன அழுத்தத்தின் காரணமாக ஏற் பட்டது எனக் கருத முடியாது. அப்படி நினைப்பது இலகுவானது. இதனை நான் அறிந்ததால் இங்கு கூறுகின்றேன்.

இது திட்டமிட்ட செயல். கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது சிறையில் கொலைகள் நடந்தன அவர் ஜனாதிபதியாக இருக்கும் காலத்தில் இப்படியான சம்பவம் நடந்துள் ளது எனச் சித்திரிக்கவும் இது நடத்தப்பட்டுள்ளது. சர்வதேச ரீதியில் ஜனாதிபதிக்கு அவமதிப்பை ஏற்படுத்துவதே இதில் இருக்கும் உண்மையான கதை - என்றார்.

# அலையில் அடித்துச் செல்லப்பட்ட இரண்டாம் நபரின் சடலமும் மீட்பு

காங்கேசன்துறைக் கடலில் குளித்த இருவர் நேற்று அலையில் அடித்துச் சென்ற நிலையில் இரண்டாவது நபரின் சடலமும் மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காங்கேசன்துறைதல்செவன இராணுவ நட்சத்திர விடுதிக்கு அருகாமையில் நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் கடலில் குளித்துக் கொண்டிருந்த இரண்டு பேர் அலையில் அடித்துச் செல்லப்பட்டனர்.

தையிட்டியைச் சேர்ந்த சிவச்சந்திரன் நிரோஜன் (வயது - 19), மாசிலாமணி தவச்செல்வம் (வயது - 19) ஆகிய இருவருமே கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்டனர். அவர்களில் சிவச்சந்திரன் நிரோ ஜன் என்பவரது சடலம் நேற்று மாலை 5 மணியளவில் கடற்படையின் உதவி யுடன் மீட்கப்பட்டது.

இந்தநிலையில் மற்றையவரான மாசிலாமணி தவச்செல்வத்தின் சடலமும் இன்று திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

இரு சடலங்களும் தெல்லிப்பழை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளன.

# வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் வரவு - செலவுத் திட்டம் அங்கீகரிப்பு

## ஆதரவு - 30; எதிர் - 3; நடுவுநிலை - 01





யாழ்ப்பாணம், டிசெ. 01

வலி.வடக்கு பிரதேசசபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் அங்கீகரிப்பது தொடர்பான விசேட கூட்டம் நேற்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு சபையின் தலைமை அலுவலக மாநாட்டு மண்டபத்தில் தவிசாளர் சோ.சுகிர்தன் தலைமையில் நடைபெற்றது.

தலைமையுரையைத் தொடர்ந்து வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதம் நடைபெற்று வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து வரவு - செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு நடைபெற்றது. 39 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஓர் உறுப்பினர் காலமாகியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஓர் உறுப்பினர் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். மீதமுள்ள 37 உறுப்பினர்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈழ மக்கள் ஜனநாயக் கட்சி ஆகியவற்றில் தலா ஓர் உறுப்பினர் வீதம் 3 உறுப்பினர்கள் சபை அமர்வுக்குச் சமூகமளிக்கவில்லை.

வாக்கெடுப்பில் 30 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - 16, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி - 4, ஐக்கிய தேசியக் கட்சி - 2, தமிழர் விடுதலைக் கூட்டணி - 2, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி - 6 உறுப்பினர்கள் ஆதரவாகவும்-

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 3 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்தனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த ஓர் உறுப்பினர் நடுநிலை வகித்தார். 27 மேலதிக வாக்குகளால் வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சண்முகலிங்கம் சஜீவன் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மன்னாரில் இருந்து இந்தியாவுக்கு கடலால் தப்பமுயன்ற 7 பேர் கைது!

இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு சட்ட விரோதமான முறையில் கடல் வழியாகப் படகு மூலம் தப்பித்து செல்ல முற்பட்ட சிறுவர்கள், பெண்கள் உள்ளிட்ட 7 பேர் கடற்படையினரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை பேசாலை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில் –

சட்டவிரோதமாக படகில் இந்தியாவிற்கு செல்ல முயற்சித்த 5 பேரும், அவர்களை அழைத்துச் சென்ற ஆள்கடத்தல்காரர்கள் இருவரும் மன்னார் – பேசாலை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும், இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் மன்னாரைச் சேர்ந்தவர்கள் எனவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இதன்போது 29 வயது இளைஞர் ஒருவரும், 29 வயது யுவதி ஒருவரும், 38 வயதான பெண்ணொருவரும், 08 மற்றும் 09 வயதுடைய இரண்டு பெண் பிள்ளைகளுமே இவ்வாறு கடற்படையினரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் 32 மற்றும் 37 வயதான பேசாலை பகுதியை சேர்ந்த இரண்டு ஆண்களே ஆட்கடத்தலில் ஈடுபட்டுள்ளனர் எனக் கடற்படையினர் குறிப்பிட்டனர்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்டவர்கள் பேசாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். பேசாலை பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கட்டுநாயக்க விமான நிலையம் விரைவில் மீளத் திறக்கப்படும்!




வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்குள் அனுமதிக்க கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை அரசு விரைவில் மீளத் திறக்கவுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த வாரத்தில் இது தொடர்பான பேச்சு சுகாதார அமைச்சு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு அதிகாரிகளுக்கு இடையே நடைபெறும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

முதல் கட்டமாக 44 ஆயிரம் வரையான வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை அழைக்கும் எதிர்பார்ப்பு இருக்கின்றது எனக் கூறப்படுகின்றது.

இந்தநிலையில், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு மாத்திரம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் விரைவில் திறக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கார்த்திகைத் தீபம் ஏற்ற முள்ளிவாய்க்காலில் தடை விதித்த பொலிஸார்

முள்ளிவாய்க்கால் பகுதியில் தீபத்திருநாள் தீபம் ஏற்றுவதற்கு முல்லைத்தீவு பொலிஸார் தடை விதித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை 7 மணியளவில் முள்ளிவாய்க்கால் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட போக்குவரத்து பிரிவு பொலிஸார் பிரதான வீதி அருகே தீபம் ஏற்றிய பொதுமக்களின் வீடுகளுக்குச் சென்று விசாரணை நடத்தினர் எனத் தெரியவருகின்றது.

மேலும் ஏற்றிய தீபத்தை அணைக்கும் படியும் அல்லது கைது செய்யப்படுவீர்கள் எனப் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கார்த்திகையில் விளக்கீடு என்பது உலகில் உள்ள எல்லா இந்துக்களும் இத்தினத்தைக் கொண்டாடுகிறார்கள். இவ்வாறான பாரம்பரிய கலாசார நிகழ்வை பொலிஸார் தடை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, உடையார் கட்டு தெற்கு மற்றும் குரவில் பகுதியில் படையினரின் முகாம்களுக்கு அருகில் உள்ள மக்கள் கார்த்திகை விளக்கீட்டை செய்ய முடியாத நிலையில் படையினர் அச்சுறுத்தியுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளனர்.

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மட்டக்களப்பில் ஊடகவியலாளர் கைது!

மட்டக்களப்பு -வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த சுதந்திர ஊடகவியலாளராக கடமையாற்றி வந்த 37 வயதுடைய ஊடகவியலாளரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரின் புகைப்படங்களை முகநூலில் பதிவிட்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ் மேற்படி ஊடகவியலாளரை நேற்றுமுன்தினம் இரவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட ஊடகவியலாளர் மீது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மூன்று நாள்கள் தடுத்து வைப்பதற்கான அனுமதியை வாழைச்சேனை பொலிஸார் பெற்றுள்ளனர். மூன்று நாள்களின் பின்னரே ஊடகவியலாளரை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## அகில இலங்கை சுகாதார சம்மேளனம் மூன்று நாள்கள் தொடர் ஆர்ப்பாட்டம்!

அகில இலங்கை சுகாதார சங்க சம்மேளனம் அடுத்து வரும் மூன்று நாள்களில் சில வைத்தியசாலைகளுக்கு முன்னால் ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தடுப்பு விடயத்தில் விஞ்ஞான முறையிலான பொறிமுறை செயற்படுத்தப்பட வேண்டும். வரவு - செலவுத் திட்டத்தில் சுகாதாரத்துறைக்கு அதிக நிதியொதுக்கம் மற்றும் கொரோனா தடுப்பில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கான கொடுப்பனவுகளை அதிகரிக்கவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தே ஆர்ப்பாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இன்று டிசெம்பர் முதலாம் திகதியன்று குருநாகல் போதனா வைத்தியசாலையின் முன்பாகவும், டிசெம்பர் 2 ஆம் திகதியன்று காலி, மாத்தறை, மாத்தளை, மற்றும் சீமாட்டி ரிட்ஜ்வே வைத்தியசாலைகளுக்கு முன்பாகவும் ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது.

டிசெம்பர் 3ஆம் திகதியன்று கொழும்பு தெற்கு போதான வைத்தியசாலை, பதுளை, அம்பாறை, தங்காலை மற்றும் ஹொரணை ஆகிய வைத்தியசாலைகளுக்கு முன்பாக ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படவுள்ளன எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காலைக்கதிர் Kalaikkathir



ந.சதாசிவ ஐயர்
(ஓய்வு பெற்ற மேலதிக பதிவாளர் நாயகம்)

# நமது நிலத்தை நாமே காப்போம்; நாமே பகிர்வோம்!

ஒரு லட்சம் பேருக்கு வேலை, ஒரு லட்சம்பேருக்கு காணித்துண்டுகள் என கடந்த சில நாள்களாக அடிபடும் பேச்சு சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.

காணிகள் தொடர்பில் அவ்வப்போது எனது அனுபவ ரீதியான விடயங்களை கட்டுரையாக பத்திரிகைகளில் எழுதி வந்துள்ளேன். வடமாகாணத்தில் யாழ்ப்பாணத்தில் எண்பது வீத்துக்கு மேற்பட்ட காணிகள் தனியார் காணிகளாகும்.

மற்றைய மாவட்டங்களில் பெருமளவிலானவை அரச காணிகள்.

வடமாகாணத்தின் வடக்கில் நெடுந்தீவிலிருந்து தெற்கில் வவுனியா வரை நிலங்கள் ஒவ்வொரு வகையிலும் செழிப்புற்றிருந்தன. பயிர் செய்யப்பட்டன. கடலால் சூழப்பட்ட நீர்வளம் குறைந்த அனலைதீவில் நெல்லும் புகையிலையும் மிளகாயும் பனங்கூடல்களில் அடுவலும்( உழுந்து அல்லது பயறுடன் சாமி கலந்து விதைப்பது) செய்து பலன் கண்டவர்களில் நானும் ஒருவன். என்.எம்.பெரேரா பொருளாதாரத்தில் செழித்து வளர்ந்தவர் நாம். திருவையாற்று படித்த வாலிபர் திட்டத்தில் ஒன்றுகூடி பாடுபட்டு பலன்கண்டவர்கள் நாம். மாங்குளம் எங்கும் மாமரம் நட்டு வளர்த்தவர் நாம். என்னைப் போல் அறுபது கடந்தவர்களின் கண்ணில் இன்றும் மறையாத காட்சிகள் இவை.

அப்போது இருந்த காணிகள் இப்போதும் இருக்கின்றன. ஆனால் காலத்தின் கோலத்தால் குறிப்பிடத்தக்க அளவு காணிகள் பராபரிப்பின்றி - பராபரிக்காமல் - பராபரிக்க முடியாமல் - இருக்கின்றன. இதற்கு காரணம் என்ன? நாம் எண்ணிக்கையில் குறைந்துவிட்டோம், இடம்பெயர்ந்துவிட்டோம், புலம் பெயர்ந்துவிட்டோம் என்பதுடன் ஆர்வம் குன்றிவிட்டோம், அக்கறையின்றி இருக்கிறோம், குறிப்பிட்டளவு நம் காணிகள் நம்வசமில்லை என்பவையும் காரணங்களே.

விட்டுக்கொடுக்கும் - சமாதானமாக தீர்த்துக்கொள்ளும் - மனப்பான்மையின்றி உள்ளே கால்வைக்க முடியாத நிலையில் உறுதிகளோடு நீதிமன்றங்களில் அலைபவர்களின் காணிகளும் கூட இவற்றிலடங்கும்.

எமது காணிகள், எமது கைகளில், எமது பராபரிப்பில் இருக்கவேண்டும். அது நமக்கும் நம் மக்களுக்கும் பயன்படத்தக்க வகையில் இருக்கவேண்டும். உறுதிகளை பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டு வாழாவிருத்தல் பொருத்தமானதல்ல. கிணற்றுப் பங்குக்காகவும் வேலிக்காகவும் பாதையுரித்துக்காகவும் விடாப்பிடியாக சமாதான சபைகளிலும் நீதிமன்றிலும் நிற்கும் வழக்குகள் இன்று நிறைந்து காணப்படுகின்றன. அவற்றை விலக்கி சமாதானமாக வேண்டும்.



காணிகள் யாவும் பிரயோசனப்படுத்தப்பட வேண்டும். ஏதாவது பயிர் செய்தல் வேண்டும். தம்மால் இயலாதபோது குத்தகைக்காவது கொடுத்தல் வேண்டும். அள்ளிக் கொடுக்க வேண்டாம், கிள்ளிக்கொடுங்கள். பெரிய காணிகள் வைத்திருப்போர் தங்கள் காணிகளில் ஒரு சிறுதுண்டை இலவசமாக வழங்கலாம் அல்லது நியாயமான குறைந்த விலையில் வழங்கலாம். ஆலயங்கள் தங்கள் காணிகளை நீண்டகால குத்தகைக்கு வழங்கலாம். இதனால் மக்கள் வீட்டுத்திட்டத்தை பெற முடியும். இன்று புலம்பெயர்ந்தோர் பலர் இங்கு வரரமலும், வரமுடியாமலும் உள்ளனர். வருடங்கள் நாற்பது ஓடிவிட்டதால் பெற்றோரின் காணிகளை அறியாக பிள்ளைகளும் உள்ளனர். எனது அனுபவத்தால் சொல்கிறேன், புலம் பெயர்ந்தோரின் பெட்டிகளில் - லொக்கர்களில் - ஏதாவது உறுதிகள் இருக்கும். உங்கள் பெற்றோரின் குறிப்புக்களில் இங்குள்ள உங்களுக்குரித்தான காணி விவரங்கள் இருக்கலாம்.

இன்று பல புண்ணியவான்கள் மற்றும் அறக்கொடைகள் என்பன தங்களால் இயன்றளவு உதவிகளை மக்களுக்கு வழங்கி வருகின்றனர். வடமாகாணத்தில் பாதைகளில் செல்லும்போது இந்தச் சிந்தனையோடு வீதியின் பக்கங்களை பார்த்துச் செல்லுங்கள். எத்தனை வீட்டுத்திட்டங்கள் நிமிர்ந்து நிற்கின்றன. அதே வேளை எத்தனை பரந்த நிலப்பரப்புக்கள் வெற்று நிலங்களாக உள்ளன. அவற்றை ஏதோ ஒரு விதத்தில் பயன்படுத்த முடியாதா? பல காணிகள் பற்றைக்காடுகளாகவும் பரந்தவெளிகளாகவும் உள்ளன. அரசின் சகலமட்ட அதிகாரிகளும், நாடாளுமன்ற - மாகாண - உள்ளூராட்சி உறுப்பினர்களும், புத்திஜீவிகளும், ஆரவமுள்ள பொது மக்களும் பாதைகளில் போகும்போது சற்று அவதானத்துடன் இவற்றைப் பார்த்தால் ஏதாவது எண்ணம் வரும். செயல்படுத்தக்கூடியதாகவும் இருக்கலாம். ஒவ்வொருவரும் தனக்கிருக்கும் அறிவால், வசதியால் ஏதாவது செய்தல் வேண்டும்.

நான் தனிப்பட்ட முறையில் பலருக்கு ஆலோசனை கூறியதுண்டு. ஓரளவு பலனும் கிடைத்தது. ஓர் உதாரணம் சொல்கிறேன். எட்டு ஏக்கர் வயல் உரிமையாளர் வெளிநாட்டில் இருக்கிறார். வேறு ஒருவர் கடந்த இருபது வருடங்களாக விதைத்து வருகிறார். ஆட்சியுறுதியும் முடித்து வைத்திருந்தார். அண்மையில் கொண்டு வரப்பட்ட காலவரோதய தற்காலிக ஏற்பாடுகளின் படி அவ் ஆட்சியுறுதி செல்லாது என எடுத்துரைத்த அதே வேளை உரியவர் வெளிநாட்டில் இருப்பதால் மனிதாபிமான ரீதியில் விட்டுக்கொடுப்புடன் நடந்து கொள்ளும்படி சொன்ன ஆலோசனையை இருவ ரும் ஏற்றனர். எட்டு ஏக்கரில் மூன்று ஏக்கர் நன்கொடையாகவும் ஐந்து ஏக்கர் குத்தகையா கவும் சமா தானமாக உறுதி முடிக்கப்பட்டது. காணியும் விதைக்கப்படுகிறது. இருவருக்கும் உரித்து உறுதியானது. காணி இரண்டானதால் தண்ணிப்பங்கும் இரண்டானது.

ஆதலால் வசதியாக பல காணிகளை வைத்திருப்போர், பெரியகாணிகளை வைத்திருப்போர் காணிகளைப் பிரயோசனப்படுத்துங்கள். ஒரு சிறுதுண்டையேனும் தானமாக அல்லது நியாய விலையில் கொடுத்து உதவ முன்வாருங்கள். குத்தகைக்கு கொடுங்கள். காணி வழக்குகளை மீளப்பெற்று சமாதானமாகுங்கள்.

நமது காணிகளை நாமே, நம்மவர்களுக்கே வழங்குவோம். தற்போது வெற்றுக்காணிகளை இனம் கண்டு காணி இல்லாதவர்களுக்கு வழங்க ஒரு லட்சம் காணித் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. இவை வழங்கப்படும் போது அரச அதிகாரிகளால் நுற்றுக்கு நூறுவீதம் நேர் மையாக செயற்படமுடியாதிருக்கும். ஆதலால் உங்கள் காணிகளை, ஏன் நீங்களே முன் வந்து, உங்கள் மக்களுக்க வழங்க முடிந்தளவு முயற்சித்தால், அது சட்டரீதியான வலுவுள்ளதாகவும், அதிகாரிகளிற்கு சங்கடம் தீர்ப்பதாகவும்கூட அமையும்.

# கிழக்கில் இதுவரை 200 பேருக்கு தொற்று!

## மாகாணப் பணிப்பாளர் தகவல்

கிழக்கு மாகாணத்தில் இதுவரை 200 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அழகையா லதாகரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்துள்ள அவர் –

கல்முனை பிராந்திய சுகாதார வைத்திய அதிகார பிரிவில் 14 பேர் புதிய தொற்றாளர்களாக



நேற்று (திங்கட்கிழமை) காலை உறுதி செய்யப்பட்டமையயடுத்து, மாகாணத்தில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 200 ஆக உயர்வடைந்துள்ளது.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் 68 நபர்களிடம் வெறப்பட்ட பி.சி.ஆர் மாதிரிகளின் பரிசோதனையின் போது 13 நபர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

திருகோவில் பிரதேசத்தில ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமையயடுத்து கல்முனை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 86 நபர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் 88 பேரும், திருகோணமலையில் 16 பேரும், கல்முனையில் 86 பேரும், அம்பாறையில் 10 பேரும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மாகாணத்தில் ஐந்து சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்பட்டு இவர்களுக்கு சிகிச்சையளிக்கப்படுகிறது. – எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேநேரம், மக்களை அவதானமாகச் செயற்படுமாறும் வெளி மாவட்டங்களில் இருந்து வருபவர்களை மக்கள் அடையாளம் கண்டு தெரிவிக்குமாறும், சன நடமாட்டத்தைக் குறைக்குமாறும், இயலுமானவரை வீட்டில் இருக்குமாறும், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன் கொரோனா வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகள் தென்படுமாயின் உரிய பிரதேசங்களின் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு அறிவிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# பி.சி.ஆர். சோதனையை அதிகரிக்க நடவடிக்கை!

கொரோனா வைரஸ் தொற்றை கண்டறியும் பி.சி. ஆர். பரிசோதனையை இந்த மாதம் முதல் மேலும் அதிகரிக்கத் தீர்மானித்துள்ளதாக இராசாயன சேவைகள் பிரதி சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஆர்.எம்.எஸ்.ரத்னாநயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

நாட்டில் நாளாந்தம் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கை இந்த மாதம் முதல் 20 ஆயிரமாக அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், கொரோனா தொற்றைக் கண்டறிவதற்காக றபிட் அன்ரிஜன் பரிசோதனையும் நாட்டில் தற்போது முன்னெடுக்கப்படுகின்றது.

இதேவேளை, கொரோனா தடுப்பூசிகளை வெளிநாடுகளில் இருந்து கொண்டு வரும் விடயம் தொடர்பில் பரிந்துரைகளை முன்வைக்க, மூன்று குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மரண அறிவித்தல்

தோற்றம்
12
*
11
*
1933



மறைவு
30
*
11
*
2020

# பொன்னம்பலம் பொன்னு

பலாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், ஆவரங்கால் மேற்கு, பத்தைமேனி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் பொன்னு நேற்று (30.11.2020) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லமுத்து பொன்னம்பலம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான ஆறுமுகம் - தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும், செல்ல முத்து - சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும், தங்கரத்தினம், செல்வநாதன், சறோ சினிதேவி, தேவராசா, இராசரத்தினம், சாந்தினிதேவி, யோகராசா, சிவதேவி, பாமராசா ஆகியோ ரின் அன்புத் தாயாரும், கந்தையா, யோகேஸ்வரி, காலஞ்சென்ற சிவபாதம், கிருபாலினி, சாந்தி மலர், குகராசா, யாழினி, லோகேஸ்வரன், சைலஜா ஆகியோரின் அன்பு மாமியும், ரஜனி - பிரதீபன், முகுந்தன் - பவளதர்சினி, அஜந்தன், ராதிகா - ரவிராஜ், வாகினி - வசந்தன், திவிஜன், தினோஜன், மகிபன், சிவோகன், வகிசன், அபிசன், கவின், தேனுஜா - பகீரதன், கிரீசன், சிவரிசன், சிவாஜன், கிரிசானி, கிரிசனா, யோகிதன், யாழிதன், காலஞ்சென்ற பிரவீனன், பிரவீனா, நிறோசன், விதுசா, யருசா, சாருகேஷ், சரணிகா ஆகியோரின் பேத்தியாரும், கிசானா, அஷ்வின், அபிலாஷ், அகீஷ், ஆதிரன் ஆகியோரின் பூட்டியுவாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைககள் இன்று (01.12.2020) பத்தை மேனி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் பலாலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாமராசா - 0447947828649 (லண்டன்)
இரத்தினம் - 0014168329922 (கனடா)
தேவராசா - 0019054798095 (கனடா)
யோகராசா - 0094 - 774919318 (இலங்கை)
செல்வநாதன் - 0094 - 762110656 (இலங்கை)

# மஹர சிறைக் கைதிகள் படுகொலை: பக்கச்சார்பற்ற விசாரணை வேண்டும்

## சபையில் எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை



சிறைச்சாலைகளில் இருக்கும் கைதிகளைப் பாதுகாப்பது அரசின் கடமை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக் காட்டி னார்.

மஹர சிறைக் கைதிகள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பக்கச் சார்பற்ற விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

மேலும், சிறைச்சாலைகள் அமைச்சின் செயலாளர் மூலம் மேற்கொள்ளப்படும் விசாரணைகளில் தமக்கு நம்பிக்கையில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதேவேளை, சிறைக் கைதிகள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச அமைப்புகள் கவனம் செலுத்த வேண்டும் என்றும், தாம் இந்தப் படுகொலைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது.

# ரவிகரன், சிவாஜி உட்பட 4 பேர் மீதான விசாரணை மே 17 இற்கு ஒத்திவைப்பு



முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் மக்களுக்குச் சொந்தமான 617 ஏக்கர் காணியை அபகரிக்கச் சென்ற நில அளவீட்டாளர்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கோட்டாபய கடற்படை முகாமுக்கு முன்பாக மக்கள் போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், எம்.கே. சிவிஜிலிங்கம் உள்ளிட்ட நால்வருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கின் விசாரணை நேற்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் 2021ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருகையில் -

கடந்த 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி, முல்லைத்தீவு - வட்டுவாகல் பகுதியில், கோட்டாபய கடற்படை முகாமுக்கு முன்பாக இடம்பெற்ற காணி அபகரிப்புக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டதற்காக முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் 28.02.2018 அன்று முல்லைத்தீவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்த நிலையில், பின்னர் பிணையில் விடுதலையாகியிருந்தார்.

இதேவேளை, வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் முன்பிணை கோரி, சட்டத்தரணி ஊடாக பிணையில் வெளிவந்தார்.

அதனைத் தொடர்ந்து இலங்கை தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணி உறுப்பினர் அ.பீற்றர் இளஞ்செழியன், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளன நிரவாக உறுப்பினர் அன்னலிங்கம் சண்முகலிங்கம் ஆகியோரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறாக நால்வர் மீதும் தொடரப்பட்ட வழக்கின் விசாரணைகள் கடந்த இரண் டரை வருடங்களுக்கு மேலாக இடம்பெற்று வரும் நிலையில், நேற்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் நீதிவான் எஸ். லெனின்குமார் முன்னிலையில் இது தொடர்பான வழக்கு விசாரணைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

இன்றைய வழக்கு விசாரணைகளில் நில அளவைத் திணைக்களத்தால் குற்றஞ் சாட்டப்பட்டோர் சார்பில், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன் மற்றும் எம்.கே. சிவாஜிலிங்கம், அ.பீற்றர் இளஞ்செழியன், அ.சண்முகலிங்கம் ஆகிய நால்வரும் மன்றில் முன்னிலையாகியிருந்தனர். இந்தநிலையில் சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து இந்த வழக்குடன் தொடர்புடைய அறிக்கை இன்னும் கிடைக்கப் பெறாமையால், குறித்த வழக்கின் விசாரணைகள் எதிர்வரும் 2021ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதிக்கு தவணையிடப்படுகின்றது என நீதிவான் உத்தரவிட்டார்.

# 349 இலங்கையர் நாடு திரும்பினர்!

கொரோனா வைரஸ் பரவல் அச்சம் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 349 இலங்கையர்கள் நேற்று (திங்கட்கிழமை) நாடு திரும்பியுள்ளனர்.

அதன்படி தென்கொரியாவிலிருந்து 275 இலங்கையர்களும், கட்டாரின் தோஹாவிலிருந்து 21 பேரும், ஜப்பானின் நரிட்டோவிலிருந்து 53 பேரும் நேற்று காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.


விமான நிலையத்தை வந்தடைந்த அனைத்து பயணிகளுக்கும் தனியார் வைத்தியசாலைசாலையின் ஊழியர்களால் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து அவர்கள் அனைவரையும் தனிமைப் படுத்தல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.




# வாழைச்சேனைக் காட்டுப்பகுதியில் ஆயிரக் கணக்கான ரவைகள் மீட்பு!

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள கோரவெளி காட்டுப் பகுதியில் ஒரு தொகை துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



தேசிய புலனாய்வு பிரிவுக்கு, இந்த விடயம் தொடர்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை இரகசிய தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

அதனைத் தொடர்ந்து அந்த இடத்திற்கு விரைந்த பொலிஸார், அந்தப் பகுதியிலுள்ள நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட துப்பாக்கி ரவைகளை மீட்டுள்ளனர்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.


## நினைவுப் பிரார்த்தனை

**அமரர்கள் ஆறுமுகம் சரஸ்வதி தம்பதிகள் (ஆசிரியர்கள்)**



தந்தையார் சிவப்பேறு 08.05.2003

தயார் சிவப்பேறு 14.12.2016

அம்மாவின் திதி - 01.12.2020

எங்களை ஆற்றுப்படுத்திய தெய்வங்களை நீள நினைந்து வணங்குகிறோம்.

மாதுமை, மருதனார்மடம், இனுவில்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

## கல்யாணமாலை

வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 1987.03.17 | பிறந்த திகதி - 1994.04.19 |
| மதம் - இந்து ஆசாரி | மதம் - இந்து ஆசாரி |
| நட்சத்திரம் - சித்திரை 1 | நட்சத்திரம் - பூசம் |
| செவ் - ------- | பாவம் - ------- |
| பாவம் - 21 | செவ் - 1இல் |
| கல்வி - A/L | கல்வி - கனடா பட்டதாரி |
| தொழில் - பிரான்ஸ் PR | தொழில் - கனடா PR |
| எதிர்பார்ப்பு - படித்த அழகான பெண் | எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகன் |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

உப அலுவலகம், சந்தை வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01 .12.2020 இல் வெளியிடப்பெற்றது.